திராவிடநாடு

2—8—59 | வார வெளியீடு | விலை 16 காசு

மாண்டிடு தமிழா!

[நாஞ்சில் ஆ. ஆரிது]

மாண்டிடு தமிழா மாண்டிடடா—நீ
வாழ்ந்தது போதும் மாண்டிடடா!

சாவகம் பர்மா எகிப்துமினும்—இத்
தாரணி எங்கும் ஒளிர்ந்திட்ட
பாவலர் பலரும் புகழ்ந்திட—எழும்
பரிதியின் சுடராய்த் தூய்மையுடன்
காவலர் கனிந்து கோலோச்சப்—பல
கற்றவர் வியந்து நம்நாடு
நாவலர் நிறைந்த தென்னாடு—சிறை
நலிந்திடல் கண்டு நடுங்காமல் (மாண்டிடு)

வடவரின் வெம்மை தாளாமல்—இவ்
வளமார் நாட்டில் அடிமைகளாய்ப்
பிடரியில் அவர்கைப் பிடியிறுக—உடன்
பிறந்தோர் பலரைத் துரோகத்தின்
நடுகளம் தனிலே கண்டபின்னே—உனை
நாணமும் மானமும் ஊடுருவப்
பிடிகையின் பிள்ளைப் பூச்சியென—உயிர்ப்
பிண்டம் எனவே வாழாமல் (மாண்டிடு)

முதுமொழி என்றாய் உன் தமிழை—அது
முழுமொழி என்றாய் அன்றொருநாள்
'எது மொழி?' என்றே கேட்கின்றார்—சிலர்
இருட்டை ஒளியென் றோதுகிறார்!
"இதுமொழி" என்றே இந்தியினை—உன்
இனமே அணைத்தல் காணுகிறாய்
மதுவினை யுண்ட குரங்காக—மதி
மயங்கி யழிந்து சிதையாமுன் (மாண்டிடு)

ஏக இந்தியா பேசுபவர்களுக்கு

அண்மையில் சென்னையிலே தென்னிந்திய வர்த்தக சபைகளின் வட்டார மாநாடு நடந்திருக்கிறது. அந்த மாநாட்டை நமது மதிப்பிற்குரிய கோவைச் சீமான் கனம் நிதியமைச்சர் திரு. சுப்பரமணியம் அவர்கள் துவக்கிவைத்துப் பேசியுள்ளார்கள். அவரது கூற்றைக் கொஞ்சம் கேளுங்கள்:—

தென்னிந்தியாவுக்கு உருக்குத் தொழிற்சாலை தேவை. புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் பத்து இலட்சம் டன் உருக்கு உற்பத்திச் சாலையைத் தென்னிந்தியாவில் ஆரம்பிக்கவேண்டும் என்று மேலிடத்தை, அதாவது டெல்லியைக் கேட்டு இருக்கிருராம்! தென்னிந்தியர்களால் கேட்கப்பட்ட எத்தனை திட்டங்கள் மேலிடத்தின் அனுமதியுடன் இயங்கி வருகிறதென்பதை நாம் அறிவோம். எல்லாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதை நாடு அறியும். இருப்பினும் கூறுகின்ருர் டெல்லியின் தயவு கிட்டும் என்ற நப்பாசையால்!

வடக்கிலே இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகளுக்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவாம். நிலக்கரி கனிப்பொருள்கள கிடைக்கின்றனவாம், தெற்கிலே அப்படிப்பட்ட வசதிகள் இல்லையாம். அப்படியானல் சேலத்திற்கருகில் கிடைக்கும் இரும்புக்கனிகளைப் பற்றி எத்தனையோ ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆராய்ந்து வெளியிட்ட உண்மைகளை நம் அமைச்சர் மறைக்கிருர் போலும்! மேலும் இதைக் குறுகிய நோக்கத்தோடு கூறுவதாக நினைக்கிறீர்கள். எங்கே மேலிடத்துப் பொல்லாப்பு ஏற்பட்டுத்தன் பதவிக்கு ஆட்டம் கண்டுவிடுமோ என்று பயந்து தனக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்கிருர். தென்னுட்டில் இவ்வளவு கனிவளம் இருந்தும் இங்கு தொழிற்சாலைகள் இல்லை. ஆகவே ஏற்படுத்தப்போகும் உருக்குத் தொழிற்சாலையை இங்கே ஏற்படுத்தவேண்டும் என்று ஆதாரத்தோடு கொஞ்சம் அதிகாரத்தொனியில் கேட்டால் டெல்லி என்ன சும்மாவா இருக்கும்? ஏது தி. மு. க. வாடை வீசுகிறதே? என்று எச்சரிக்காதா? இதை நாம் அறியாததா என்ன? ஆகவே தனக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளும் வகையிலேயே பேசி இருக்கிருர் அமைச்சர். அவர் பதவியைப் பாதுகாத்துக்கொள்ள ஏதாவது

கூத்தன்

செய்துகொள்ளட்டும், நமக்கு அக்கரையில்லை. ஆனல் இந்நாட்டிலே கனிவளம் இல்லையென்று எந்தத் தன்மானமுள்ள தமிழனும் சொல்லமுடியாத பச்சைப்பொய் சொல்லுகிருரே, அங்குதான் நம நெஞ்சிலே வேதனை வேலெனக் குத்துகின்றது. இவர் இவ்வளவு பெரிய பச்சைப்பொய் ஏன் சொல்லவேண்டும்? திராவிடம் தன்னுட்சி பெற்றுச் சுதந்திரமாக வாழும்போது அந்த நாட்டைப் பாதுகாக்க நல்ல திறமைசாலிகள் உழைப்பாளிகள், மக்கள் தொண்டர்கள் தான் தேவைப்படுவார்கள். மேற்கண்ட தகுதிகள் நம் அமைச்சருக்கு இருக்குமானல் இவர் உழைப்பை வீணுக்க தி. மு. க. நிச்சயம் விரும்பாது. அவர் சார்ந்திருக்கும் கட்சியைப்போல் தி. மு. க. பதவி வெறிபிடித்தல்லவே. அவர்கள் எவ்வளவு பதவி வெறிப்பிடித்தவர்கள் என்பதைக் கேரளம் நமக்குக் கண்ணுடிபோல் காட்டுகிறதே! ஏன் நமது மந்திரிகளின் ஒவ்வொரு மேடைப் பேச்சிலும் அதைத்தான் நாம் காண்கிறேம்.

அதே மேடையில் பேசிய திரு. பி. கே. சாரங்கபாணி அவர்கள் "தென் இராச்சியங்கள் 22ல் இருந்து 26 சதவிகித அயல்நாட்டுச் செலவாணியைச் சம்பாதித்துக்கொடுத்தும் இந்தியாவின் மொத்த அபிவிருத்தித் திட்டச்செலவான 4800 கோடியில், 500 கோடிதான் தென் இராச்சியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது" இதைக் கூறியவர் தி. மு. க. அல்ல என்பதை அமைச்சர் உணரவேண்டும். இது எதைக்காட்டுகிறது.? வட இந்தியர்கள் தென் இந்தியர்களின் வளர்ச்சியில் அக்கரை காட்டவில்லை என்பதைத் தானே காட்டுகிறது.

அண்மையில், கனம் காமராசர் அவர்கள் தெற்கே இனிக் கட்டவேண்டிய அணைக்கட்டுகள் என்ன இருக்கின்றன? எல்லாம் கட்டியாகி விட்டன. இனிக் கட்ட வேண்டுமானல் அ[illegible] வாய்க்குத்தான் கட்டவேண்டும் என்று சற்று இறுமாப்போடு பேசியுள்ளார்கள். மேலே கூறியுள்ள அதே சாரங்கபாணி அவர்கள் அதே மேடையில் கோதாவரி நீரில் 5 சதவிகிதமும், கிருஷ்ணு நீரில் 20 சதவிகிதமும்தான பயன்படுத்தப்படுகிறது. மீதி நீர் வீணுகிறது. இதைத் தடுத்து முழுதும்

(14-ம் பக்கம் பார்க்க)

அந்த ஒரு சொல்!

[18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (2—8—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 3

"ஐயா! மார்தட்டுகின்றனரே, மராட்டியர். என்ன சொல்லப்போகின்றீர்கள்?" என்று சின்னாட்களுக்கு முன்பு, சிலராம் நேரு அவர்களை, வினவினர் ஒரு நிருபர். வேறு சமயமாயிருந்தால் வெகுண்டிருப்பார், நேரு! காரசாரமான சொற்களை ஆரமாகத் தொடுத்திருப்பார்!! இப்போதுதான், அனலிடையகப்பட்ட புழுப்போல், புனலிடை சிக்கிய துரும்புபோல் ஆகி வருகிறதே அவரது நிலை. அதனுல், நிதானித்து, பெருமூச்சுகளோடு தந்திருக்கிருர் பதில். அதனைப் பார்க்கும்போது, பண்டிதர் அவர்களா, இவ்வளவு பணிவுடன் விடையிறுத்தார்? அவரது திருவாயிலிருந்தா இப்படியொரு சொல் உதிர்ந்தது! — என ஆச்சரியமடைந்தோம்.

அலைகடலென மக்கள் ஆர்ப்பரித்து எழுந்தனர் மராட்டியத்தில்! அஞ்சேன், என்று முழக்கமிட்டவர் நேரு. அலகாபாத் வாழ் குஜராத்தியர், தமக்கொரு தனிமாகாணம் வேண்டுமெனத்தோள் தட்டினர்; தாளடியில் வீழச்செய்வேனே ஒழிய, இசையேன் என்று துப்பாக்கிகள் எடுத்து நீட்டப்பட்டன. தென்னகம் 'திராவிடநாடு' கேட்டு வருகிறது; சிறுபிள்ளைத்தனம், 'நான்சென்ஸ்' என்று நாத்தழும்பேற ஏசிடும் ஆவலுக்கு இரையானரேயன்றி, இம்மியளவும் காது கொடுக்க விரும்பவில்லை. மராட்டியம்—கூர்ஜரம்—திராவிடம்—என்று இப்படியெல்லாம் பேசுவதே 'ஏக இந்தியா'வுக்கு இழுக்கு என்று எண்ணினர்! இவ்விதம் மொழியின் அடிப்படையிலும் இனவாரியாகவும் ஒவ்வொருவரும் அமைப்புகளைக்கோரினுல், 'இந்தியன்' என்ற சொல் என்ன ஆவது! 'இந்தியா' என்கிற பெயர் எக்கதியாவது!—என்று வெகுண்டார்!!

குமரிமுதல் இமயம் வரையிலுள்ள இப்பெரும் பூபாகம், ஒரே நாடாக விளங்கவேண்டும் என்பது பண்டிதர் அவர்களின் வேட்கை. ஆயிரமுண்டென்ருலும் பேதங்கள், அவ்வையாவும் முறியடிக்கப்பட்டு 'இந்தியா' எனும் ஒரே தாயின் மக்களாக அனைவரும் வாழவேண்டும் என்பது அவருடைய ஆசை. ஆசை தூய்மையானதாகக்கூட இருக்கலாம். ஆனுல் சாத்தியமா? எத்தனையோ மொழிகளும், பழக்கவழக்கங்களும் கொண்ட இப்பூபாகம் ஒன்றுதல் எங்ஙனம்? வடவரின் மொழிகள் அனைத்தும் வடமொழியின் சேய்கள்! தனிமொழியாம் தமிழின் குழந்தைகளன்ரே தேன் மொழிகள்! ஒரே நாடு எனின் அதற்கொரு பொதுமொழி வேண்டும். அதற்கு 'இந்தி'யிருக்கிறது எனச் சொல்லி, அதற்குஆதிக்கம்தேட முயற்சிக்கின்றனரே? எப்படி ஆடும் புலியும் சேர்ந்துவாழும்? சர்க்கசில் வேண்டுமானுல் சாத்தியமே ஒழிய, நடைமுறையில் எப்படி இயலும்? ஒன்ருகவேண்டும் எனச் சொல்லி, அதிகாரங்களையெல்லாம் டில்லியில் குவித்துக்கொண்டன்ரே ஆட்சிபுரிய முயலுகிறீர்?—என்றெல்லாம் நம் போன்ருேர் கேட்டால், நேரு அவர்களுக்கு ஆத்திரமே வந்தது! 'நான் விரும்புகிறேன். அதை எதிர்க்கிறீர்களா?" எனும் குரலிலேயே, இவ்விதம் கேட்போரைப் பார்த்துச் சீறினர்—சினந்தார்! அவருடைய மனம் 'இந்தியா' ஒன்றைத்தான் கண்டதே ஒழிய, அந்த 'இந்தியா'வுக்குள்ளிருக்கும் திராவிடத்தையும் வங்கத்தையும் மராட்டியத்தையும் மற்றும்பல பகுதிகளையும் எண்ணிப்பார்த்திட மறுத்தது. ஏசினர்! பேசினர்! இப்படிப் பேதம் விரும்பிகள் மாண்டால்கூட மனங் கலக்கமாட்டேன்; என் முடிவைமாற்றிக்கொள்ள மாட்டேன், என்று அவர் கர்ச்சித்ததை உலகமே அறியும்!!

"இந்தா விபீடணு இலங்காபுரி இராச்சியம்" என்று சிராமச்சந்திரன், விபீடணனுக்குஅளித்தானும்—காலட்சேபப் பாகவதர் கதைப்பார். இலங்கையில் இன்றிருப்பது, பண்டாவே ஒழிய, விபீடணனல்ல என்கிற விளக்கம் யாரும் தரவேண்டியதில்லை. வெள்ளையனும் ஏதோ, காருள்ளவும் கடல் நீருள்ளளவும், 'இந்தாருங்கள் காங்கிரசாரே இந்தியா' என்று தம் வசம் அளித்துவிட்டுப் போனதாக, நேருவும் அவரது சகாக்களும் எண்ணுகின்றனரே ஒழிய, "மனிதன் வகுப்பதே எல்லை. அது மாறும்" என்கிற உண்மையினை உணர்ந்தனரில்லை.

தேசிய கீதத்தில் மட்டும், 'குஜராட்டமராட்டா திராவிட உத்சலவங்கா' என்று வைத்துக்கொண்டனரே ஒழிய, இந்தப் பகுதிகளின் பிரச்சினைகள் எண்ணற்றன, எப்படியோ வெள்ளையனுல் இவை ஒன்று சேர்க்கப்பட்டன, இந்த 'ஒற்றுமை' எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்கிற அடிப்படைக்கேள்விகளை, எண்ணின

றில்லை. எடுத்துரைப்போரின் வார்த்தைகளை ஏற்பதும் 'பாபம்' என்று மூடிக்கொள்கின்றனர் காதுகளை. இந்த முரட்டுப் பிடிவாதத்தின் விளைவாகவே நாம் கண்டிக்கப்படுகிறோம்! நாள்தோறும் தமது வேட்கையை வலிவுள்ளதாக்க அதிகாரங்கள் அத்தனையும் 'இந்திய சர்க்கார் எனும் டில்லி'யில் குவித்துக்கொண்டு, மாநில அரசுகள் என்பவைகளின் பல் பிடுங்கும் பணியினைப் பல வழியினும் அதிகமாக்கிக்கொண்டு வருகின்றனர்! இப்படி, பலகோடி மக்கள் வாழும் பலபகுதிகளை ஒன்றாக்கும் ஆசைக்கு ஆளானோர், சரிதத்தில் ஏராளமுண்டு.

கிரேக்கம்முதல் இந்தியா வரையில் வென்றுவந்த மாவீரன் அலெக்சாண்டரும், ரோமாபுரியிலிருந்து இங்கிலாந்து வரை தன் விரல் நுனியில் ஆடும்படி வைத்திருந்த ஜூலியஸ் சீசரும், மத்திய ஆசியாவிலிருந்து சீனம் வரையில் தன் வாள் வீச்சைக்கண்டு மருளவேண்டும்என்று முனைந்த தைமூரும், ஐரோப்பாவையே ஒரு நாடாக்கி ஆளப்போகிறேன் என்று முனைந்த இட்லரும், அவனுக்கு முன் கிளம்பி வீழ்ந்த நெப்போலியனும், 'அகண்ட' ஆசைக்குப் பலியாகி, களம்பல கண்டு, கடைசியில் பிடிமண்ணான பெரிய வீரர்களாவார்கள்! வாள் கொண்டும் பீரங்கி மூலமும் பெரிய அரசுகளை ஏற்படுத்தினார்கள்—நாட்டின் எல்லைகள் மாறின—ஏக அரசு எனும் நிலை புகுத்தப்பட்டது. ஆனால், இவர்கள் மறைந்ததும், மீண்டும் எல்லைகள் மாறி, மொழி பேசுவோரும், இனவழி அமைந்தோரும், பழையபடி தத்தமது எல்லைகளை நிறுவிக்கொண்டனர் என்பதுதான் சரிதமாகும்! இருட்டுக் கண்டமென்னப்படும் ஆபிரிக்காவில் இதோ அன்றன்றாடம் செய்திகள் பெறுகிறோம் — 'ஏக'மாக ஆளத்தான் ஆசைகொண்டனர், ஐரோப்பிய துரைமார்கள். அந்தந்த வல்லரசுகளின் பிடிப்புகளில் சிக்கிய ஆப்பிரிக்கப் பகுதிகள், விடுதலைபெற்று, மொழிவழியிலும்இனவழியிலும் ஒன்றுசேர முயன்றுவருகின்றன. இதெல்லாம் நேருவுக்குத் தெரியும்! இருந்தாலும் ஏதோ, இன்று அவர் உருவாக்கும் ஏக இந்தியா ஆண்டாண்டுகள் வரையில் மாறாது எனும் கருத்தில் இது காறும் மார்தட்டியே வந்தார்!!

ஆனால், நிருபருக்களித்த பேட்டியின்போது. பிடிவாதம் தளரும் அறிகுறி தோன்றுகிறது—அவர் உதிர்த்துள்ள ஒரு சொல், வளரும் உரிமைக் குரலின் விளைவு என்பதை விளக்குகிறது. துப்பாக்கிகள் துளைத்தாலும், எத்தனைபேர் மாண்டாலும் எனக்குக் கவலையில்லை—இந்தியாவின் ஒற்றுமையை நிலை நாட்டவே முயலுவேன், என்று கூவுவார், ஏதோ இவருக்குப் பின்வரும் சந்ததியும், டில்லி பீடத்திலே உட்கார்ந்துகொண்டு, இவ்வளவு பெரிய பரந்த பூமியை ஆளும் என்கிற நம்பிக்கையில். அந்த நம்பிக்கை குலைகிறது என்பதைத்தான் அந்தச் சொல், காட்டுகிறது. "தனி மாநிலம் கேட்கின்றனரே, மராட்டியர். தங்கள் பதிலென்ன?" என்கிற கேள்விக்கு.

"என்னவோ இதெல்லாம் கூடாது என்பது என் எண்ணம். ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை எப்படிக் கூறமுடியும்? நான் என்ன தீர்க்கதரிசியா! இப்போது கூடாது என்று சொல்கிறேன்" என்று பெருமூச்சோடு பதிலளித்திருக்கிறார்!!

நேரு அவர்களுக்கே, இன்றுள்ள 'ஏக இந்தியா' எதிர்காலத்திலும் இருக்கும் என்கிற நம்பிக்கையில்லை! 'தனக்குப்பின்' என்ன ஆகும் என்கிற காட்சியும் கண்முன் தெரிய ஆரம்பித்திருக்கிறது! அதனாலேயே, 'எதிர்காலத்தில் என்ன ஆகுமோ' என்கிற சொல்லை உதிர்த்திருக்கிறார்!!

இந்தச் சந்தேகம் நேருவுக்கே ஏற்பட்டுவிட்டது! இது சாதாரணமானதெனக் கருதோம். பிடிவாதமாக எல்லைகள் மாறாது என்பது போலவும், இன்று இவர்கள் ஏற்படுத்தி வைக்கும் அரசு அமைப்புகள் ஆழிசூழ் உலகம் அழியும் வரையிலும் இருக்கும் என்பது போன்றும், பேசி வந்தார்கள்! இது நடவாது—இந்தத் தலைமுறையோடு 'ஏக இந்தியா' சரி—பிறகு அந்தந்த மொழி வழி மக்கள் பிரிவர்—தனித்தியங்குவர் என்று சொன்னால், ஏசுவர்! அப்படி நினைப்பதே மாபாதகம், தாயைத் துண்டாட நினைக்கும் தறுதலை ஆட்டம் என்றெல்லாம் சபிப்பர்! அப்படிப்பட்டவர்களுக்கே ஐயம் எழுந்துவிட்டது — 'என்னவோ என் ஆசை இது. எனக்குப் பின் என்ன நடக்குமோ, யார் கண்டார்கள்?,' என்று பேசுகிறார்—நேரு!!

அவரது வாயிலிருந்து உதிர்ந்துள்ள இந்தச் சொல், சாதாரணமானதல்ல. வீராதி வீரராக வீம்பு பேசியவரின், வாயிலிருந்து வந்திருக்கிறது. இந்தச் சொல். "என்னுடைய ஆசை. ஆனால் எதிர் காலம் எப்படியோ!," என்கிறார் நேரு. நாமும் அதைத்தான் சொல்கிறோம்—இந்தியா என்ற, வெள்ளைக்காரன் ஏற்படுத்திக் கொடுத்த இந்த அமைப்பு, அழியாத 'வரம்' பெற்றதல்ல! அப்படியே நீடிப்பதற்கு, இந்த உபகண்டத்தில் வாழும் அத்தனைகோடி மக்களும் ஒரே மொழியோ, ஒரே கலைவழியோ, இனவழியோ கொண்டோரல்ல; பலபிரிவினர்!! அவர்களுடைய விடுதலைத் தாகத்தை நேரு போன்றோரின் செல்வாக்குப் பல்வழிகளில் தடுத்திருக்கிறது. பிறகு! நேரு அவர்களுடைய வாயிலிருந்து உதிர்ந்த அந்தச் சொல்லே விளக்குகிறதே, பிறகு, என்னாகுமோ என்கிற உண்மையை!!

★

வருந்துகிறோம்

சென்னை தியாகராயர் கல்லூரித் தலைவர் பேராசிரியர் **எம். கே. சண்முகம்** அவர்கள் தமது **51**-வது வயதில் 29—7—59 அன்று இயற்கை எய்திவிட்டார் என்ற திடுக்கிடும் செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். சர் தியாகராயர் கல்லூரியின் வளர்ச்சியில் தமது காலத்தையும் உழைப்பையும் செலவிட்டு அயராது பணியாற்றிய உத்தமரைக் கல்லூரி இழந்துவிட்டது. அவர் மறைந்தாலும், அவரது புகழ் என்றென்றும் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை. பெருந்தகையாரின் மறைவால் வருந்தும் அனைவருக்கும் நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

கண்டதும் கேட்டதும்

மாயவரத்தில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். உறுப்பினர்களை மட்டுமே அனுமதிக்க முடியும், வேறு யாரையும் விடோம் என்று உள்ளேவிட மறுத்தனர். விடுவேனா! என்னதான் இரகசியம் பேசுகிறார்கள் என்று காணும் ஆவல் அதிகமாகவே, யாருக்கும் தெரியாமல் நுழைந்தேன். அலங்கரிக்கப்பட்ட பந்தலில், வெகுகாரசாரமாகச் சட்டதிட்ட நகலை விவாதித்துக் கொண்டிருந்தனர். மாவட்டவாரியாகப்பார்த்தேன். கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தோழர்கள், மிகவும் சிரத்தையுடன் எல்லா விவாதங்களிலும் பங்கெடுத்துக்கொண்டனர்! எம்.பி. சுப்பிரமணியம், M.L.A. வில்லாளன், அம்பில் தர்மலிங்கம், கோவிந்தசாமி, M.L.A. சி. வி. எம். அண்ணாமலை, ப. உ. சண்முகம், M.L.A. முதலியோர் அடிக்கடி ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருந்தனர்! எல்லோரது முகத்திலும் ஆர்வமும் பரபரப்பும் தென்பட்டது. கழகத்தின் சட்ட திட்டங்களை ஆக்குகின்ற பணியல்லவா? இதை வைத்துத்தானே கழகம் கட்டிக்காக்கப்படவேண்டும்! எனவே, எல்லோரது முகத்திலும், சிந்தனை இரேகைகள் மின்னிக் கொண்டேயிருந்தன. வந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்களும், விவாதங்களில் பங்கு எடுத்துக்கொண்டனர். ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசவேண்டும் என்கிற ஆவலேற்பட்டது. அதற்குள் யாரோ, என் கையைப்பிடித்து இழுப்பது தெரிந்தது. தஞ்சை மாவட்டச் செயலாளரான இளங்கோ என்னைப் பிடித்து இழுத்து வெளியில் கொண்டுவந்தார்! வெளியே நின்றுகொண்டிருந்த மாயவரம் வட்டச் செயலாளர் கிட்டப்பா எம். சி. என்னைத் தரதரவென்று இழுத்துக் கொண்டுபோய், ஒரு காருக்குள் தள்ளினார்!! மாயவரம் வீதிகள் வழியே கார் போயிற்று. ஆங்காங்கே செய்யப்பட்டிருந்த அலங்கார வளைவுகளும், தட்டிகளும், என்னைக் கவர்ந்தன. திடீரென ஒரு மூலையில், ஏதோ பெரிய வெள்ளம் வருவது போலிருந்தது. என்னவென்று பார்த்தேன்! கழகக் கொடிகளைப் பிடித்தவண்ணம் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து கொண்டிருந்தனர். இலட்சிய நடிகர் இராசேந்திரன் தலைமையில் ஊர்வலம் வந்துகொண்டிருக்கிறது என்றார் கூட இருந்தவர். சென்னை மேயர் அரசும், துணைமேயர் சிவசங்கரனும் காரில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார்கள். நானும் ஊர்வலத்தோடு போனேன். பிரமாதமான அலங்காரங்களுடன், கண்ணைப் பறிக்கும் விளக்கொளிகளுடன் ஒரு மேடை தென்பட்டது.

நமது "ஞானக்கண்" நிருபர்

அந்த மேடை அமைந்திருந்த இடமெல்லாம் மக்கள் குழுமிக்கிடந்தனர். புனல் நாடு, என்பர் தஞ்சை மாவட்டத்தை! காட்டாறுபோன்ற காவேரி, சிற்றோடையாக அடங்கி ஒடுங்கிச் செல்வது மாயவரத்தில் தான்! 'மக்கள் வெள்ளம்' அன்று அங்கே பெருக்கெடுத்திருந்ததைக் காண மகிழ்ந்தேன். இதே மாயவரத்தில் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பு, திருவாரூரில் நடைபெற்ற தென்மண்டல திராவிட மாணவர் மாநாடு சம்பந்தமாகப் போயிருந்தேன். கருணாநிதி வரவேற்புக்குழுத் தலைவராகவும், அரங்கண்ணல் செயலாளராகவும் இருந்து நடந்த மாநாடு அது. சம்பத் தலைமை தாங்கினார். அந்த மாநாடு சம்பந்தமாக மாயவரம் போயிருந்தபோது விரல்விட்டு எண்ணக்கூடிய தோழர்கள் தான் அங்கு இருந்தனர்! ஆனால், இதோவெள்ளம்போல் தோழர்கள் காட்சி தருகிறார்கள்!! அவர்கள் மத்தியில் ஓடியாடி எஸ். கணேசன், கே. பக்கிரிசாமி. து. காசிநாதன், எஸ். நிஜாமுதீன்கந்தரம், ஆர். சொக்கலிங்கம், எம். சுந்தரமூர்த்தி, வி. பாஸ்கரன், பி. டி. இராசன், இளந்திரையன், ஆர். சம்பந்தம், ஆர். பழனிச்சாமி, முதலிய தோழர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். உண்மையில் என் மனம் பூரித்தது. இப்படிக் கழகம் வளருமா என்று கனவு கண்டு கொண்டிருந்த காலம் அது!! இந்த யோசனையில் இலயித்திருந்த என் கவனத்தை, 'அதோ! அதோ!' என்கிற கூச்சல் கலைத்தது. இரவு நடக்கவிருந்த "உதயசூரியன்" நாடகக் குழுவினரும், கலைஞர் கருணாநிதியும் வந்துகொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கூட்டத்தின் ஆர்வம் கட்டுக்கடங்காமற்போயிற்று. பொதுச்செயலாளரும் ஏனைய தோழர்களும் வந்து மேடையில் அமர்ந்தனர்! தோழர்கள் பேசிய பிறகு அண்ணா பேசினார், "கடவுளுக்கே பயப்படாத கட்சி என்று கூறப்படும் நாங்களும், இரத்தத்துக்குப் பயப்படாத கட்சியெனக் கூறப்படும் கம்யூனிஸ்டுகளும் ஒன்றாகச் சேர்ந்து இன்று கோலத்தில் காங்கிரசார் செய்வதுபோல,'அரசாங்கமே வெளியேறு!' என்று ஒரு கிளர்ச்சியை நடத்த முடியாதா? நடத்தினால் எப்படியிருக்கும் என்று சொல்லவா வேண்டும்! எனினும், நாங்கள் வாளா இருப்பதேன்? ஜனநாயக முறையின் மீதுள்ள நம்பிக்கையால்தான்! தேர்தல் முறையில் ஒரு கட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதென்றால், அடுத்த தேர்தல் வரும் வரையில் அதற்குச் சந்தர்ப்பம் தரப்பட்டாக வேண்டும்". குரல், காதுகளில் ஒலித்தது! கவனம், எங்கோ சென்றது!! அங்கிருந்து கிளம்பினேன்.

* * *

பரபரப்பு! திகைப்பு! பிறகுபேச்சு! கொஞ்ச நேரம் ஆலோசனை! — இப்படியாக பத்தரை மணி நேரம் கூடியமர்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தனர். ஓர் தம்மானைத் தவிர்த்து, காமராஜ் உள்ளிட்ட

மாயவரம் பொதுக்குழு

எல்லா மந்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள். என்ன அவ்வளவு முக்கியமான செய்தி? ஏனிப்படி எல்லோரும் உட்கார்ந்து ஆலோசனை நடத்துகிருர்கள்? கேரளத்தைப்பற்றியா! அண்ணுதுரை மாயவரத்தில் பேசியதால் ஏற்பட்ட குழப்பமா! என்னகாரணம்? என்று யோசித்தேன். அவர்கள் யோசனையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித்தான் என்ருர் அங்கேயிருந்த ஒருவர். கதர்தான் போட்டிருந்தார். ஆனுலும்என்னைப்பார்த்துச் சிரித்ததிலிருந்து, 'வெளியே கதர். உள்ளே கழகம்', என்று தெரிந்துகொண்டேன். அமைச்சர்கள் மட்டுமின்றி, காங்கிரஸ் பிரமுகர்கள் எனப்படுவோரும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இராசாராமும் அங்கே இருந்தனர். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கூடி ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். பதின்மூன்று பேர், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் போய் ஆங்காங்கு எப்படியிருக்கிறது காங்கிரஸ் என்றுஆராய்ச்சிபண்ணி வர அனுப்பப்பட்டார்களாம். அவர்கள், தாங்கள் பெற்ற அனுபவத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். சொல்லச் சொல்ல அவர்கள் முகம் வியர்க்க ஆரம்பித்தது! மந்திரிகள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டார்கள் பீதியுடன்!! வேறெதைப்பற்றியுமல்ல; எல்லோரும் வளர்ந்து வரும் திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருந்தனர். எப்படி தி. மு. க.வை முறியடிப்பது, எப்படிக்காங்கிரசுக்கு ஆள் திரட்டுவது, என்பது பற்றிப் பேச ஆரம்பித்தனர். 10½ மணி நேரம்பேசினர்!! கடைசியில், பெரிய நகரங்களுக்குக் காங்கிரஸ் தலைவர்களை (தலைவர்கள் என்போர்தானே மந்திரிகள்!) அனுப்பி, ஆங்காங்கும், அமைப்பு வேலையைப் பலப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தனர். இந்த முடிவுக்கு வரவா 10½ மணி நேரம் தேவைப்பட்டது —என்பீர்கள்! அவ்வளவு நேரம் தேவைப்பட்டது இந்த முடிவுக்கு வரவல்ல; நம்மைப்பற்றிப் பேச!! அந்தளவுக்கு எச்சரிக்கை கொண்டிருக்கிறது, தமிழ்நாடு காங்கிரஸ்.

"என்னப்பா! எங்கே வந்தே?" என்று குரல்கேட்டுத் திரும்பினேன், வாயில் 'கோல்டுபிளேக்' சிகிரெட்டுடன் நின்றுகொண்டிருந்தார் காமராஜ். போனேன். "என்ன சேதி?" என்ருர். "சம்பளம் வாங்க இன்னும் பத்து நாளுக்கு மேல் உள்ளது! அதாவது இன்று தேதி இருபதுதான்!!" என்றேன். என்னைக் கோபத்தோடு பார்த்தார். நாங்கள் மந்திரியாயிருப்பது சம்பளம் வாங்கத்தான் என்று நினைக்கிருய் என்று கோபத்தோடு கேட்பது போலிருந்தது, அவரது பார்வை. பசி நேரம் வேறு! பசித்தால் பொறுக்கமாட்டாராம் காமராஜர்! அதிலும் அசைவ உணவென்ருல் அவருக்குப் பிடிக்குமாம்! நாம் ஏன் அவர் எதிரில் நிற்கவேண்டுமென நடையைக் கட்டினேன்.

* * *

இரண்டு பேர், வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே வந்தனர்! யாரதுஎனும் என்ணத்தோடு போன நான் அவர்களில் ஒருத்தர் மீது மோதிக்கொண்டேன். வேறு யாருமல்ல, பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்த கே.டி. கோசல்ராம்தான் அது. காமராசின் வலது கை என்று சொல்வார்களே, அந்தக் கோசல்ராம்தான். "என்னங்க நலமா?" என்றேன். ஏற இறங்கப் பார்த்தார். அவர்கையில் 'புதுமை' என்கிற ஒரு பத்திரிகை இருந்தது. அவர் இப்போது நடத்திக்கொண்டிருக்கும் வார ஏடாம் அது. "நலத்துக்கென்ன குறைச்சல்! இந்தக் காமராசர்தான்......" என்று இழுத்தார். "உங்களுக்கு ரொம்ப வேண்டியவராச்சே!" என்றேன். "இப்போது, அவர் யார் யாருக்கோ வேண்டியவராகிவிட்டார். எங்களையெல்லாம் ஆளாவா தெரியுது அவருக்கு. அது சரி. என்ன சேதி. ஏன் என்னை நிறுத்தினுய்?" என்ருர் அவசரத்தோடு. "காங்கிரசைப் பலப்படுத்துவதற்காக என்ன செய்யலாம் என்று தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டிகூடி ஆலோசித்ததே! அது பற்றி உங்கள் கருத்தென்னவென்று தெரிந்துகொள்ளலாமா?" என்றேன். "ஓகோ! காங்கிரசைப் பலப்படுத்தப் போகிருர்களாமா? எப்படிப் பலப்படுத்துவார்களாம்! இந்தா, இதைப்படி... என் பத்திரிகையில் நான் எழுதியிருப்பது" என்று 'புதுமை'யை நீட்டினுர். அதில் எழுதியிருந்தது பின்வருமாறு:—

"...துரதிர்ஷ்டவசமாக மந்திரிகளே கட்சியாகவும், ஆட்சியாளராகவும் இரட்டை வேடம் போட்டு இரண்டிலும் தோற்கும் நிலையைப் பார்க்கிரேம்."

"ஜாதிவெறியும் கையூட்டும் ஒழுங்கற்ற போக்கும் நிர்வாகத்தில் சகிக்க முடியாத நாற்றத்தை வீசச் செய்கின்றன."

"நல்ல திட்டங்களெல்லாம் நாசமாகப் போகின்ற மோசத்தைப் பார்க்கிரேம். நாட்டையுயர்த்த வேண்டிய கூட்டுறவு,

கேட்கக் கேட்க!!

பிலாய் உருக்குத் தொழிற்சாலையை ஒட்டி டில்லி, ஒரு நகரம் அமைத்துள்ளது. அங்கே,

கட்டப்பட்ட வீடுகளில் வசதியில்லை!

கட்டிடம் ஒழுங்காக கட்டப்படவில்லை!

செலவு ஆயிரம்!

பலனே பரிதாபம்!!

—என்று திட்டக்குழு நிபுணர்கள் போய்ப் பார்த்து, விபரம் தருகின்றனர்.

கேட்கக் கேட்க!

இந்தியத்துணைக்கண்டத்து இரயில்வேககளில் நாள் ஒன்றுக்கு 24 மின்சாரப் பல்புகள் வீதம், அதாவது ஒருமணி நேரத்துக்கு ஒன்று வீதம், திருட்டுப் போய்க் கொண்டிருப்பதாக, கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்டது திருடர்களையல்ல! கணக்கை!!

தமிழ்நாடு காங்கிரஸ்

தனியாரை உயர்த்தும் வகையிலே செய்யப்படும் சீரழிவு, வட்டத்தை உயர்த்த வேண்டிய திட்டம், அதிகாரிகள் வயிற்றை நிறைக்கும் வஞ்சகம், இவை மலிந்துவிட்டன."

இதெல்லாம் நீங்க எழுதியது தானு!— என்றேன், வியப்போடு. "ஆமாம். இதுமட்டுமா? பார், தினசரி கூட ஆரம்பிக்கவிருக்கிறேன். அதற்காகத்தான் சென்னைக்கு வந்திருக்கிறேன்," என்ருர். என்ன, வலதுகையே, காமராசரைக் குத்துகிறதே என்றெண்ணிக் கொண்டு கிளம்பினேன்!!

* * *

"சர்க்கார் ஊழியர்களைவிட, காங்கிரசார் இலஞ்ச ஊழலில்திளைத்து இருந்தால், எப்படி அவர்களைத் திருத்த முடியும்? இலஞ்சத்தை ஒழிக்க வேண்டுமேயானல் காங்கிரசார் தாங்கள் யோக்கியமானவர்களாக நடந்து, முன் மாதிரியாக விளங்க வேண்டும் என்று நான் சொன்னேன். என்ன தவரு?"

"அதெப்படிப் பேசலாம். காங்கிரஸ் கட்சியிலிருந்து கொண்டே, காங்கிரசாரையெல்லாம் அயோக்கியர்கள் என்று சொன்னல் என்ன பொருள்?"

"அயோக்கியர்கள் வருத்தப்பட்டும். உங்களுக்கெல்லாம் என்ன!"

"சாதாரண தலைவர் மட்டுமல்ல நீங்கள். மத்ய சர்க்காரில் மந்திரியாக இருப்பவர். நீங்களே இப்படியெல்லாம், பேசினல், மக்கள் என்ன நினைப்பார்கள் எங்களைப் பற்றி? இலஞ்சம் வாங்குகிருேம்என்றல்லவா பேசியிருக்கிறீர்கள். இது நமது காங்கிரஸ் கட்சிக்கே அவமானமல்லவா?"

"இவ்வளவு வீராவேசம் வருகிற நீங்கள் யோக்கியர்களாக நடந்து காங்கிரசுக்குப் பெருமை தேடிக் கொடுங்களேன்! என்னிடம் ஏன் சண்டைக்கு வருகிறீர்கள்?"

நிஜலிங்கம் பேட்டி

"ஓகோ! உமக்கு இவ்வளவு தைரியமா? காங்கிரசைப்பற்றி நீர் இப்படிப் பேசினீர் என்பதை இதோ நேரில்போய் இந்திராதேவியிடம் சொல்கிருேம். இந்திரா யார் தெரியுமா? நேரு அவர்களின் மகள்! கவனமிருக்கட்டும்!!"

அதைக் கேட்டதுதான் தாமதம்; மத்திய சர்க்காரின் மந்திரியென்று கூறப்பட்ட அவர், அவர்கள் பின்னுலே ஓடினர்--கெஞ்சினர். அவர்கள் மிஞ்சினர். "நான் அப்படிப் பேசவில்லை என்று, இன்றே பத்திரிகைகளுக்கெல்லாம் மறுப்பு எழுதிவிடுகிறேன்," என்ருர். யார் அது என்று பார்த்தேன்! மத்ய சர்க்காரின் முக்கிய மந்திரிகளில் ஒருவரான ஜகஜீவன்ராம்தான் அவர்!!

* * *

காங்கிரசை வளர்க்கவேண்டும் என்று ஒரு பக்கம் பேசப்படுகிறது! காங்கிரஸ் நாற்றமெடுத்து விட்டது என்பது தலைவர்களுக்கும் புரிகிறது! இங்கிலையில் எப்படிக் காங்கிரசை வளர்க்கப் போகிருர்கள்?— என்கிற சிந்தனையுடனிருந்த என்னை, இன்னுமொரு குரல் கலைத்தது. மைசூர் முன்னுள் பிரதமராகவும், கர்நாடக காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவுமிருந்த நிசலிங்கப்பாவின் குரல்தான். அவர் என்ன சொல்கிருர் தெரியுமா, காங்கிரஸ்காரர்களைப்பற்றி:—

பதவி மோகம் கொண்டு, காங்கிரசார் அலைகிருர்கள். சேவா உணர்ச்சியை இழந்து சுய நலக்காரர்களாய்த் திகழுகிருர்கள். இதனல் அவர்கள் அரசியலில் வேட்டைக்காரர்களாகிவிட்டார்கள்."

* * *

என்னடா இது! கோசல்ராம், ஜகஜீவன்ராம், நிசலிங்கப்பா! தொண்டர், அமைச்சர், தலைவர்! இவர்களே காங்கிரசைப்பற்றி இப்படியெல்லாம் சொல்கிருர்களே, இப்படிப்பட்ட காங்கிரசை யாரால் தான் காப்பாற்ற முடியும்? இது புரியாமல், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் உட்கார்ந்து 10½ மணி நேரம் பேசுகிறதே!!— என்று எண்ணினேன். என் மனக்கண் முன், **'மாயவரம்'** தெரிந்தது. மக்கள் மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுவரும் நம்பிக்கையின் வலிவு புரிந்தது. இந்த நம்பிக்கையினை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமேயென்றெண்ணியபோது, வளரும் பொறுப்புத் தெரிந்தது! அதே யோசனையுடன் போய்க் கொண்டிருந்த என்னை ஒருவர் நிறுத்தினர்.

"என்ன?"

"வீடு வீடாகப்போய் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ப்பதில் உங்களுக்கு விருப்பமா? என்று கேட்டு, விரும்பினல் சேர்த்து வருகிருேம். அதனுல் உங்களையும் கேட்டேன். உங்களுக்கு விருப்பமா?" என்ருர்.

"நான் உறுப்பினனுகி மாதம் ஒன்ருகிவிட்டது. உங்கள் தொண்டை மெச்சுகிறேன். இப்படித்தான் பாடுபடவேண்டும்,"

என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்! மனதில் அளவிலாத ஆனந்தம் எனக்கு!!

★

'புதுமை' சந்திப்பு

*

சிக்கனம் நாடுபவனின் சிக்கனத் திட்டத்தில் இன்றியமையா முதல் சிக்கனம், சிக்கனப் பண்புவாய்ந்த வீட்டரசியைத் தேர்ந்தெடுப்பதே. ஏனெனில் ஆடவன் எவ்வளவு சிக்கனமாக வாழ்ந்தாலும் இல்லத் தலைவி சிக்கனம் அறியாவிட்டால், அவன் சிக்கனம் முழுவதும் விழலுக்கு இறைத்த நீராய்விடும்.

★

தற்காலத்தில் மனித வாழ்க்கையில் தொலைபேசி முக்கியமான இடத்தை வகித்து வருகிறது. தொலைபேசி இல்லாவிட்டால் வாணிபம் நின்றுவிடும்! நிலையை எய்தும். அரசியல் படுத்துவிடும். மக்களும் ஒருவரை ஒருவர் சடுதியில் தொடர்புகொள்ளும் வசதியை இழந்து தவிப்பார்கள்.

ஆனாலும் பிரிட்டனில் உள்ள "ஹல்" என்ற நகரத்து மக்கள் தொலைபேசியினால் அடையும் பயனளவிற்கு வேறு எந்த நகர மக்களும் அடையமுடியாது. பிரிட்டனிலேயே "ஹல்" நகரம் ஒன்றில் தான் தனியார் வசம் தொலைபேசி உள்ளது. அதை இயக்கும் வர்த்தகக் குழுவினர் "ஹல்" நகர மக்களுக்குத் தொண்டு புரிவதோடு, இன்பமும் பயக்குமளவிற்கு ஒரு பிரிவு ஏற்படுத்தியிருக்கின்றனர். அதற்கு (Phonodiary) "டெலிபோன்டைரி" என்று பெயர்.

காலையில் எழுந்து, இன்று என்ன சமையில் செய்வது என்று வீட்டுத்தலைவி கையைப் பிசைந்து கொண்டு நிற்கவேண்டியதில்லை. "டெலிபோன் டைரி" பிரிவிலுள்ள சமையல் எண்ணைக் கூப்பிட்டால் போதும். மறுபுறத்தில் ஓர் இனிய குரல் கேட்கும். என்னென்ன சமையல் செய்யலாம், எப்படிச் செய்வது என்று மூன்று நிமிடம் சொல்லப்படும். தொல்லையைவிட்டு வீட்டுத் தலைவி அடுப்பை மூட்ட வேண்டியதுதான்! இது எப்படி என்று வியப்படையவேண்டியதில்லை. ஒவ்வொரு நாளும் புதிய புதிய சமையல் பட்டியல் தயாரித்து அதை டேப் ரிக்கார்டு செய்து குறிப்பிட்ட எண் மூலம் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல மற்றுமொரு எண்ணைக் கூப்பிட்டால், அன்றுடம் தேவையான புலால், காய்கறி, பழம் இவைகளின் நடப்பு விலை தெரிந்துகொள்ளலாம். எல்லாம் நொடிப்பொழுதுதான்.

பிறந்ததினத்தன்று ஒருவர் ஒரு எண்ணைக்கூப்பிட்டால் "உங்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து" என்று தொடங்கி அவருக்கு ஆண்டுப்பலன் கூறப்படும். அதில் நம்பிக்கையில்லாதவர்களும் நகைச் சுவைக்காகக் கேட்டு மகிழ்வார்களாம்.

கிருஸ்துமஸ் பண்டிகையின் போது சிறுவர்களுக்கென ஒரு எண்ணில் "தாய சாண்டாகிளாஸ்" கதை சொல்வதுபோல் சொல்லப்படுமாம்.

தவிர நகரத்தில் எந்தத் தியேட்டரில் என்ன படம் நடக்கிறது என்றும், முக்கியபடங்களைப்பற்றிச் சிறு விளக்கங்களும் ஒருஎண்ணில் தரப்படும். ரேஸ், விளையாட்டுப் பந்தயங்கள் முதலிய காலங்களில் அவைகளுக்கெனத் தனித் தனி எண்களில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

மிகவும் முக்கியமானமற்றுமொரு பகுதி, முதலுதவிப் பகுதி. தீப் புண், தேள்கடி, நீரில் முழுகுதல் இப்படிப் பிரித்து ஒவ்வொன்றுக்கும்ஒரு எண் தரப்பட்டிருக்கும். வீட்டில் குழந்தை நாணயம் ஒன்றை விழுங்கிவிட்டால்,அதன் தாய் திருதிருவென்று விழித்துக்கொண்டிராமல், அதற்கெனஏற்பட்டிருக்கும் எண்ணைக் கூப்பிட்டால் உடனடியாக என்னசெய்யவேண்டுமென்று சொல்லப்படும். முதலுதவிப் பகுதி பெரிதும் பாராட்டப்படுகிறது.

தேர்தல் காலங்களில் போட்டியிடும் உறுப்பினர்களின் பேச்சுகளை டேப் ரிக்கார்டு செய்து குறிப்பிட்ட எண்களில் அவர்களின் பேச்சைக் கேட்டு மகிழலாம். இசைக்கும் இங்கு இடமுண்டு. குறிப்பிட்ட நல்லபாட்டுக்களைச் சில எண்களில் கேட்டு மகிழலாம். பொதுத் தொலைபேசிகளில் சிறுவர்கள் இரண்டு பென்னி செலவு செய்து தங்களுக்குப் பிரியமான பாட்டைக் கேட்டுக்கொண்டே இருப்பார்களாம்.

இவையெல்லாவற்றிற்கும் மூலகர்த்தா "டேப் ரிக்கார்டு" தான். "டெலிபோன் டைரியில்" மறுபுறம் ஆட்கள்யாரும் பதில் தருவதில்லை. தினமும் காலையில் அன்றுடநிலைக்கு வேண்டியவாறு அந்தந்த எண்களில் பதிலளிக்க வேண்டிய டேப் ரிக்கார்டு ஒலி இணைக்கப்பட்டு, எண்ணைக் கூப்பிட்டவுடன், தானே இயங்கி ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பதில் ஒலிக்கும். மேலும் "டெலிபோன் டைரி" தனிப் பிரிவாக இயங்குவதால் அன்றுட மற்றைய தொலைபேசிப் பகுதி வேலை செய்வதை இது சிறிதும் பாதிக்காது.

இன்பத் தொலைபேசி உள்ள "ஹல்" நகர மக்கள் கொடுத்து வைத்தவர்கள் தான்!

❋

புதிய ஆங்கில நூல்கள்

"நியூஜஸ்டிஸ்"

வேணு எழுதியவை

1. English or Hindi
விலை 30 பு. காசு.

2. Dawn of Wisdon
விலை 40 பு. காசு

ஏஜண்டுகளுக்குக் கழிவு: 25%

விவரங்களுக்கு:

நியூ ஜஸ்டிஸ் வெளியீடுகள்
29, முத்தியாலு நாயக் தெரு,
புரசை, சென்னை-7.

தெளிவும் முடிவும்

கரந்தை—கணேசன்

மருத்துவ நிலையத்தை விட்டுப் புறப்படுவதற்காக எழுந்துகொண்டிருந்தார்கள் டாக்டர் சீதா அவர்கள். ஒரேஅடியாகக்காலையில்பார்க்க வேண்டிய நோயாளிகளை எல்லாம் பார்த்தாகிவிட்டது என்கிற திருப்தி அவர்கள் முகத்திலே நிழலாடியது. அந்தச் சமயமாகப் பார்த்து உள்ளேவந்த வேலையாள், 'தங்களை யாரோ ஒரு அம்மாள் பார்க்கவேண்டும் என்கிறார்கள்; பெயர் நீலாவாம்' என்றான்.

'நீலாவா...! வரச்சொல், என்றபடியே பறுபடியும் தன்னுடைய இருக்கையில் அமர்ந்தார்கள். வேலையாள் முணுமுணுத்தபடியே அழைக்கச் சென்றான். தொண்டிலே இருக்கிற உண்மையான இன்பத்தை அனுபவிக்க முடியாதவன்தானே அவன்.

தன்னுடைய இருக்கையில் அமர்ந்தவுடன் டாக்டர் சீதாவின் மனம்எங்கெல்லாமோ பறந்துசென்றது. மனம் என்பது முக்காலத்திலும் பயணம் செய்யக்கூடிய ஞானியல்லவா? இந்த முக்காலத்திலும் சரியான முறையில் பயணம் செய்யக்கூடியவர்களைத்தான் முற்காலத்தில் 'ஞானி' என்றார்களோ என்னவோ-சற்றுச் சிந்தனைக்குரிய செய்திதான்.

நீலா...அன்றுதன்னுடைய கண்களிலே அவள்படும் பொழுது இருந்த நிலை; இப்பொழுது தன்னைப் பார்க்கவந்திருக்கும் போது அவளிருக்கும் நிலை இவ்விரண்டையும் ஒரே சமயத்தில் ஒத்திட்டுப்பார்த்த டாக்டரின் மனத்திலே அவர்களை அறியாமலே ஒரு உவகை குடிகொண்டது. மெல்லத் தன் தலையைத் தூக்கி, எதிரே உள்ள நிலைக்கண்ணாடியில் முகத்தைப் பார்த்தார்கள். தன் மனத்தின் பிரதிபலிப்பை முகம் அப்படியே தேக்கிக் காட்டுவதை உணர்ந்தவுடன் பெண்மைக்கே உரிய அந்த நாணம் அவர்களைக் கவிந்துகொண்டது.

மனம் வேகமாக ஓடியது. நிலா' அவள்வீதியிலே காப்பாற்றுவாரற்றுப்புழுதி மண்ணோடு புழுதி மண்ணாகக்கிடந்தாள். உயிரோடு போராடிக் கொண்டிருந்த வேளையில்தான் டாக்டர் அவர்களின் கண்களிலே தென்பட்டாள். பெண்மைக்குப் பெண்மை இரங்கிற்று. தனது மருத்துவநிலையத்தில் சேர்க்கப்பட்டாள். அதுமட்டுமல்ல, ஊசலாடிய உயிர் உறுதிப்பட்டதுபோலவே, அவளுடைய உள்ளத்தையும் உறுதிப்படவைத்த பெருமை டாக்டரம்மாள் அவர்களுக்குண்டு. தொட்டால் துவளும் கொடியாக இருந்த அவளுடையவாழ்வைத் தொடவே முடியாத செந்தியாக மாற்றியாயிற்று. இறுதியில் நிலா அளித்த வாக்குறுதி, 'பட்டதெல்லாம் போதும்தாயே, படமுடியாதினித்துயரம்' என்ற அந்தச்சொல். 'இனி உயிரே போவதாக இருந்தாலும் சரி, அதற்காக என் மானத்தை ஈடுவைக்கமாட்டேன்' என்று கூறிய உறுதிமொழி. இடைநேரம் சிறிதுதான் என்றாலும், இத்தனையும் அவர்கள் மனதிலே மொத்தமாகத் திரையோடியது, பல டாக்டர்களாலும் இந்த நோயை ஒன்றும் செய்ய முடியாது என்று கைவிட்டபிறகு; தான்முயன்று வெற்றி பெறச் செய்து காட்டியபொழுதுகூட அடையாத பெருமை, நீலாவின் வாழ்விலே தானஏற்படுத்திய மாற்றத்தை எண்ணியபொழுது சீதா அவர்களுக்கு உண்டாயிற்று.

இதற்குள் எதிரே காலடி ஓசை கேட்டது, வேறுயார்? நிமிர்ந்து பார்த்தார்கள்—நிலாதான்.

'என்ன நிலா...வா...வா...சுகம் தானே?' என்றார்கள் டாக்டர். நிலா தன்னுடைய சுகத்தைக்கூறுவதற்கு முன்பே, தான் அறிந்துவிட வேண்டுமென்ற அவ்வளவு ஆவல்.

நிலாவின் வாயிலிருந்து தெறிக்கின்ற 'சுகந்தானம்மா' என்ற சொல் டாக்டர் அவர்களின் காதில் விழுந்தால்போதும், அவர்கள்மீது குற்றால நீர் வீழ்ச்சியே கொட்டுவது போன்றிருந்திருக்கும். ஆனால், நீலா எதிர்பாராத நிலையில் டாக்டர் சீதாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள். அழகான பட்டுப் புடவை என்று எடுத்து உடுத்த அதிலிருந்து தேள் கொட்டினால் எப்படி இருக்குமோ, அப்படி ஆகிவிட்டது அவர்களுக்கு. இருந்தாலும் சமாளித்துக் கொண்டவர்களாய், 'என்ன நீலா இது? என்ன? என்று கூறியவாறே நீலாவை எழச்செய்து எதிரே உள்ள இருக்கையில் அமரச்செய்தார்கள்.

நீலாவுக்குத் தன்னைக் காப்பாற்றிய தெய்வத்தின் முன். தான் அழுவது அவ்வளவு சிறந்ததாகப்

படாவிட்டாலும், அழுகையை நிறுத்துவது அவ்வளவு ஒன்றும் முடிகிற காரியமாகத் தெரியவில்லை. அலை அலையாக எழுந்து அலைந்து நீர், கரையை உடைப்பது போல் அவள் மனத்தில் உள்ள துன்பமாகிய எண்ண அலைகளும் அவளுடைய மனத்திட்பம் என்கிற கரையை உடைக்க ஆரம்பித்துவிட்டது. தேம்பிக்கொண்டே இருந்தாள். எங்கே அன்பு இருக்கிறதோ அங்கேதான் துன்பம் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் என்பதற்கு நீலா சாட்சியாகி நின்றாள்.

அதற்குள் டாக்டர் சீதாவின் மனத்திலோ எண்ணச்சூறுவளிகள் எழுந்து சுழன்றன; 'இவள் தன் உறுதியை இழந்துவிட்டாள் போலும்! அதனால்தான் பேசமுடியாத நிலையில் தேம்புகிறாள். கொஞ்சநேரம் இவர்களுக்கிடையில் அமைதி நிலவியது. டாக்டர் அவர்கள் அந்த அமைதியை உடைத்தார்கள்.

"நீலா! எதுவாக இருந்தாலும் கவலைப்படாதே! உள்ளதை ஒளிக்காமல் சொல்" என்றார்கள்.

"டாக்டரம்மா, நீங்கள் தானே என்னைக் காப்பாற்றனீர்கள்" என்றாள் நீலா.

எதிர்பாராத இந்தக் கேள்வி டாக்டரின் மனத்திலே ஆச்சரியக் குறியை எழுப்பியது. ஒருவேளை இவளுக்குப் வைத்தியம்பிடித்துவிட்டதோ என்று கூட எண்ணிவிட்டார்கள்.

"இதிலென்ன சந்தேகம்?"

"நீங்களே என்னைக் கொன்றுவிடவும் வேண்டும்" என்றாள் சாவதானமாக.

"கொல்லவா?" அதற்குமேல் டாக்டரால் பேசமுடியவில்லை. தன் தலையின்மீதுயாரோ பெரிய பாராங்கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுச் சிரிப்பதுபோன்றிருந்தது. கைநாடி எழுபத்திரண்டும் நூற்றிரண்டாகிவிட்டதோ என்று கூடச் சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உடம்பெல்லாம் ஒரே வியர்வை. முதன் முதலில் பிண அறுவைக்காக நின்ற பொழுதுகூட இத்தனை அதிர்ச்சிஏற்படவில்லை. அத்துணை அதிர்ச்சி! என்ன இருந்தாலும் அவளின் உள்ளத்தில் உள்ளதை வாங்கியாகவேண்டுமே!

"என்ன சாகத் துணிந்துவிட்டாய்?" புன்னகையை வரவழைத்துக்கொண்டே கேட்டார்கள்.

"ஆமாம் அம்மா, நான் தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதி..."

நீலா முடிக்கவில்லை. டாக்டருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. 'தான் நினைத்தது சரியாகப் போயிற்று என்று கருதியவர்களாய், 'காப்பாற்ற முடியவில்லை, மீண்டும் நரகத்தில் வீழ்ந்துவிட்டாய், இது தானே நீலா?' என்றார்கள் கம்பீரமாக. கேள்வியிலே அனல் வீசியது.

"இல்லையம்மா...அப்படி ஒன்றுமில்லை" நீலா அலறியேவிட்டாள்.

எவ்வளவோ முயற்சிசெய்து வைத்த சரியான குறி தவறிவிட்டால் வேட்டைக்காரனின் மனம் என்ன நிலை அடையுமோ, அதே நிலையை அடைந்தது டாக்டர் சீதாவின் மனமும்.

"புதுமையான பெண்ணாக அல்லவா இருக்கிறாய், உன்னைப்புரிந்துகொள்ள முடியவில்லையே" என்றார்கள் டார்டர்.

"புதுமை ஒன்றுமில்லையம்மா, என் நிலை அப்படிப்பட்டது. என் வாழ்க்கையில் தெளிவு கிடைத்தது தங்களால். ஆனால், தெளிவுக்கேற்ற முடிவுகிடைக்கவில்லையே? என் செய்வேன்? இறுதியாக நான் பெற்ற முடிவுதான் சாவு என்றாள் நீலா.

"தெளிவு—முடிவு நன்றாக விளங்கச்சொல்' என்றார்கள் டாக்டர்.

"சொல்கிறேன். சொல்லி உங்களின் முடிவின்படி நடக்கத்தானே வந்திருக்கிறேன். நான் பலருக்கும் படுக்கைச் சுகம்தரும் பாவையாக இருந்தவள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படி இருக்கும் பொழுதுதான் வாலிபர்கள் தந்த வரப்பிரசாதம்; ஆண்டவன் பக்தர்களுக்குத் தருவதாகச் சொல்கிறார்களே அதுபோல எனக்குக் கிடைத்தது. அதன் பலனாகத் தான் வீதியிலே நடைபாதை ஓரத்திலே கவனிப்பாரற்றுக் கிடந்தேன். என் உடலோடு தங்கள் உடலை ஒட்டிக்கொள்ள காத்துக் கிடந்தவர்களில் பலர் கண்ணற்ற கபோதிகளைப்போலச் சென்றனர். ஏதும் அறியாதவர்களைப்போல நடந்தனர், குடையும் நோயின் துன்பத்தோடு பசிவேறு! என்ன செய்ய? பழைய உறவை எண்ணியாவது பார்க்கமாட்டார்களா? என் இழிநிலையைக் கண்டாவது ஏதாவது தரமாட்டார்களா? என்ற நப்பாசை காரணமாகக் கையேந்திக் கிடப்பேன்.

இங்கிலையில் சிலர் கனைத்துக் 'காலம்மாறிப்போச்சு' என்பார்கள்.

வேறுசிலர், 'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்' என்று வேதாந்தம் பேசுவர். இந்நிலையில்தான் இம்மாதிரியான நபர்களிலே ஒருவன், அவன் என்னுடைய வாடிக்கைக்காரர்களிலே குறிப்பிடத் தக்கவன். அவ்வழியே வந்தான். அவன் என் நிலையைக் கண்டு 'இரங்கி' ஏதாவது தருவான் என்று எண்ணியவளாய், கையேந்தினேன். அவன் பழைய நினைப்பிலேயே, நான அழைப்பதாக எண்ணினானோ என்னவோ ...'அழுகின பழத்தைச் சாப்பிடுபவன் நானல்ல பெண்ணே, சீ...... இன்னுமா உனக்கு இந்த இழவு' என்று ஒரு வசனமே பேசி என் மீது காரி உமிழ்ந்தான். என்னை யாரோ சுரீர் என்று எதிர்பாராத விதமாகச் சாட்டையால் அடிப்பது போன்றுபட்டது. என்ன செய்ய? மானம்கெட்டவளுக்கு இதெல்லாம் மகத்தான பரிசுதானே என்று எண்ணி அமைதியுற்றறேன்.

அதற்குப் பிறகுதான் நீங்கள் என்னைப் பார்த்தீர்கள். அழைத்து வந்தீர்கள், ஆதரவு காட்டினீர்கள், அன்பைக் கொட்டினீர்கள், என் வாழ்விலே மறுமலர்ச்சியை—புத்துணர்ச்சியை ஏற்படுத்தினீர்கள். நானும் பழைய பட்டைகளை உதிர்த்த புதிய மரமானேன். புதுமை பெற்றேன். பழைய எழிலைப் பெற்றேன். நீங்கள் என் கண் கண்ட தெய்வமானீர்கள். உடலோடு உள்ளத்தையும் தூய்மை செய்தீர்கள். இனி என்வாழ்வில் எது நேரினும் நான் முன்நிலையை அடையமாட்டேன். பழைய வாழ்க்கையைக் கொள்ளமாட்டேன் என்று உறுதி கூறினேன்" என்று கூறி நிறுத்தினாள் நீலா. அவளுடைய கண்களிலே கண்ணீர்த் துளிகள் தேங்கி உருண்டன. டாக்டர் நீண்ட பெருமூச்சை இழுத்து விட்டுவிட்டு, வேலைக்காரனை அழைத்து இரண்டு கோப்பை காப்பி வாங்கிவரும்படி அனுப்பினார்கள்.

நீலா தொடர்ந்தாள், "அம்மா வெளியில் நேற்றுவரை என் வாழ்க்கையை எப்படியோ ஓட்டிவிட்டேன். நேற்றிரவு, நான் சொன்னேனே, என் மீது காரி உமிழ்ந்தவன் என்று; அவன் என்னைக் கண்டுவிட்டான். கண்டவுடனேயே, 'ஏது நீலா நிலவாகிவிட்டாளே, இனிமேல் நமக்குக் கவலை இல்லை' என்றபடியே தன் கோரப்பற்களைக்காட்டிக்கொண்டே என்னிடம் வந்தான்.

நான் தைரியமாகவே, "நீலா, பழையவளல்ல, இவள் புதியவள், சுடு நெருப்பு" என்றேன்.

"ஏது நன்றாகப் பேசுகிறாயே" என்றபடியே என மேல் கையை நீட்டினான். என்னையுமறியாமல் அவன் இடது கன்னத்தை எனது வலதுகை பதம் பார்த்துவிட்டது. எதிர்பாராத இந்தத் தாக்குதலால் அவன் சற்று நேரம் அப்படியே நின்றுவிட்டான். அதற்குப்பிறகு அவன் சீறிய சீற்றம். ஊம்...... அம்மா... இப்பொழுது நினைத்துக் கொண்டால்கூடப் பயமாக இருக்கிறது.

'உன்னைக் கூடிய சீக்கிரத்தில் ஒரு கை பாக்க்கிறேன். பச்சைக் குச்சுக்காரிக்கு இவ்வளவு ஆணவமா? எத்தனை காலமாக இத்தனை பத்தினித்தனம்?' என்று கர்ச்சித்தான்.

பிறகு, இரவு எப்பொழுது கழியும்; தங்களை எப்பொழுது காணலாம் என்று கண் விழித்துக் கிடந்தேன். இரவு முழுதும் எனக்கு ஒரே சிந்தனை! ஒரே கேள்விக்கணை? இனிமேல் நாம் திருந்திய வாழ்வு நடத்தவே முடியாதா என்பதுதான். என்னைப் பொறுத்தவரையிலும், நான் சொல்கிறேனம்மா, என் வாழ்க்கையில் ஏற்பட்ட களங்கம் கலையாது என்பது மட்டுமல்ல, அதன் கறைகள் விரிந்துகொண்டுதான் இருக்கும்-- நான் இந்த உலகத்தில் இருக்கும் வரை.

உலகம் வெறும் நீதிபோதனைச் சாலையாக இருந்தால் மட்டும் என் போன்றவர்கள் புனிதம்டைய முடியாது; நீதியைப் பலப்படுத்தும் வழியும், வகையும் கொண்டதாகவும் திருத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் உங்களைப் போன்றவர்கள் எங்களைப் போன்றவர்களுக்குத் தரும் தெளிவு நல்ல முடிவைப் பெறமுடியும். அதுவரை தெளிவுக்கேற்ற நல்ல முடிவு சாவுதான். அதனால்தான் காப்பாற்றிய தாங்களே, துளி நஞ்சால் என்னை...' என்று முகத்தைக் கைகளால் புதைத்துக்கொண்டாள்.

டாக்டர் சீதாவுக்குத் தன்னிடம் வைத்திய உதவிபெற்ற நீலா என்ற பரிதாபத்துக்குரிய பெண் பேசுவதாகவே படவில்லை. தன் முன்னாலே பட்டங்கள் பல பெற்ற பேராசிரியை பேசுவதாகவே பட்டது. சமுதாயச் சந்தையே ஒரு வகையான கல்லூரிதான் என்பது அப்பொழுதுதான் டாக்டருக்குப் புரிந்தது. நிலாவின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்பதே டாக்டருக்குப் புரியவில்லை. என்ன இருந்தாலும் ஆறுதல் சொல்லித்தானே ஆகவேண்டும்.

"நீலா இவ்வளவு தெளிவு பெற்ற நீயா இப்படிப் பேசுகிறாய். அதிலும் என்னிடம் சாவுக்கு மருந்து கேட்கிறாயே! கேட்கலாமா? அதற்காகவா உனக்கு வாழ்வளித்தேன்?' என்றார்கள் டாக்டர்.

"வேறு வழி தெரியவில்லையே அம்மா?" என்றாள் நிலா.

"அப்படியானால் என்னோடு இருந்துவிடேன், மருத்துவ விடுதியில் பணியாற்றலாம்" வேறு வழியற்ற நிலையில் டாக்டர் சீதா இதைக் கூறினார்கள்.

'எனக்குத் தாங்கள் வாழ்வளித்துவிடுவீர்கள். ஆனால், என் போன்றவர்கள்?'

டாக்டரால் பதில் கூறவே முடியவில்லை. சிந்தனை செய்தவண்ணம் தலையைக் கவிழ்ந்தபடியே இருந்தார்கள். சற்று நேரங்கழித்து நிமிர்ந்து பார்த்தார்கள். எதிரே நிலா இல்லை. அவள் எப்போதோ பறந்துவிட்டாள்.

*

காலையில் மருத்துவ விடுதிக்குப் புறப்படுவதற்கு முன் அன்றைய தினத்தாளின் முக்கியமான பகுதிகளை மட்டும் ஒரு கண்ணோட்டம் விட்டுவிட்டுச் செல்வது எபபொழுதும் டாக்டர் சீதா அவர்களின பழக்கம். அதேபோல் அன்று காலையில் தினத்தாளைப் பிரித்தார்கள். முதற் பக்கத்தில்;

கடற்கரையில் காதலர்கள் கொலை.

மெரினா கடற்கரையில் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் இக்காதலர்கள் கொலை பட்டுக் கிடந்தனர். இவ்விருவரும் இளம் வயதினர். அதனால் காதல் காரணமாகப் பெற்றோர்கள் ஒத்துக்கொள்ளாததினால் இவர்கள் தங்களைத் தாங்களே தற்கொலை செய்துகொண்டிருப்பார்கள் என்று பஞ்சாயத்தார்கள் கருதுகிறார்கள். பெண்ணின் இடது கையில் மட்டும் "நிலா" என்று பச்சை குத்தியிருக்கிறது. மேலும் போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்' என்ற செய்தி வெளியாகி இருந்தது.

"நிலா" என்றவுடன் டாக்டருக்குச் சதக்கென்று யாரோ வேலை நெஞ்சிலே பாய்ச்சுவதுபோல இருந்தது. இருந்தாலும், 'எத்தனையோ பேர், அதிலும் அவள் நிலை வேறு' என்றவாறு சமாளித்துக் கொண்டார்கள்.

அதற்குள் வேலைக்காரி தபால் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தாள், பிரித்துப் பார்த்தார்கள். நிலா எழுதியிருந்தாள்.

அன்புள்ள டாக்டரம்மாவுக்கு,

வணக்கம்.

நான் வந்த பிறகு எவ்வளவோ முயன்றேன் அந்தக்கொடியவனிடமிருந்து விடுபட. ஆனால், அது என்னை விட்டபாடில்லை. "என்னைச் சேராமல் தன் ஜென்மம் வாழாது" என்று கூறிற்று அந்த மனித வடிவத்திலிருந்தமிருகம். அதனால் இன்றிரவு கடற்கரைக்கு வரச் சொல்லியிருக்கிறேன். அங்கே... அதை...... பிணமாக... ஐயோ! என்ன நேருமோ! அதே எனக்குத் தெரியவில்லை. அதனால்தான் முன்பே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

எக்காரணத்தாலும் இனி நான் தூய்மை கெடமாட்டேன். இது உறுதி!

வாழிய நலம்!

அன்புமிகு,

நீலா.

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் சற்று நேரம் அவர்களுக்குச் சுயநினைவே இல்லை. அவர்கள் மனம் மட்டும் "நிலா... பலியாகிவிட்டாயா" என்று ஓங்கிக் கூக்குரலிட்டுக்கொண்டே இருந்தது.

★

இலக்கியத்தில் நாம்!

—(க. தங்கவேலன்)—

"ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும் தந்திரமும் ஆடலும் பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட — அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கிறாய்? கண்களைத் திறந்து உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான்! வெயிலில் உலர்கிறான்! அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் காசாயத்தைக் களைந்தெறி. அவனைப்போலவே நீயும் புழுதியில் இறங்கிவா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியேவா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து, நின் ஈசனைக் கண்டுகொள்!"

ஆம்! எண்ணங்கள் பழுத்த இதயச்சோலை— தூக்கிடும் விழிகளில் துணிவு தெறித்திடும் வீர உருவம்—தென்றல் வீசிடும் அன்புப் பேச்சு— யார் இவர்.? வங்க நாட்டின் தங்கக் கவியெனப் புகழ்ந்துரைக்கப்படும் தாகூர்தான் இப்படிக் கூறுகின்றார்! ஆமாம்! இந்தியாவிலேயே முதன் முதலாக நோபில் பரிசு பெற்ற தாகூரே தான் தமது "கீதாஞ்சலி"யில் குறிப்பிட்டுள்ளார்! இதே கருத்தினை நாம் எடுத்து இயம்பிடிலோ கேலி பேசுகிறது ஒரு கூட்டம்! கிண்டல் புரிகிறது மற்றொரு கூட்டம்! கேலியும் கிண்டலும் கலந்த வசை மொழிகளை வாரியிறைக்கிறது இன்னொரு கூட்டம்! போதாதற்கு 'நாத்திகன்' என்றும் நம்மைப் பார்த்துப் பட்டம் சூட்டி மகிழ்கிறது.

இன்னோரன்ன நிகழ்ச்சிகளெல்லாம் நமக்கு ஒன்றும் புதிதல்ல! நம் முன்னோர்கள்— நமது பாதை வழி சென்றவர்கள் அனைவருமே தூற்றப்பட்டிருக்கிறார்கள்! சாக்ரடீஸை நஞ்சூட்டிக் கொன்றார்கள்! இங்கர்சாலை எள்ளி நகையாடினார்கள்! கலீலியோவை நாடு கடத்தினார்கள்! இயேசுவை சிலுவையிலறைந்தார்கள்! முகமது நபியைக் கல்லால் அடித்து விரட்டினார்கள்! 'ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை, நாடி நாடி நாடி நாட் கழித்த போதிலும், வாடி வாடி வாடி வாடி வாடுகின்ற மாந்தர்கள் கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே!' என்ற பாடல் தீட்டியவர், நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே சுற்றிவந்து மொண மொணத்துச் சொல்லு மந்திர மேதடா? நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்; சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவையை அறியுமோ?" என்று பாடியவர்கள்கூட அன்று கண்டிக்கப்பட்டவர்கள்தான்.

ஆனால், இன்று அறிவுபலமில்லாத—மூளைபலமற்ற அனுதாபத்திற்குரியவர்கள் நம்மை நோக்கி வீசிடும் ஏசல்கணைகளைப்பற்றி நாம் துரும்பளவும் கவலைப்படத் தேவையில்லை!

"கோயில்கள் விபசாரிகளின் விடுதி" என்றார் காந்தியார்! இயேசுவும் புத்தரும் கூறினார்கள்! "உளியிட்ட கல்லிலும் புளியிட்ட செம்பிலும் இருப்பானோ எங்கள் ஐயன்?" என்று கேட்டார் திருமூலர்! அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளோடு நிறைந்தது" என்று கேட்டார் தாயுமானவர்!

"ஆதியிலே வழிபாட்டுக் கார்ந்தபெருங் கோயில்பல
சாதிமதச் சாக்கடையாய்ச் சண்டாளர் இருப்பிடமாய்
நீதி அறம் அழித்துவரல் நின்மலனே நீ அறிவாய்!
கோதுகளை அறுத்தொழித்துக் குணம் பெருகச் செய்யாயோ?"

என்றார் தமிழ்த்தென்றல் திரு. வி. க! ஆனால் இதே உண்மையை உலகோருக்கு நாம் எடுத்துக் கூறும்போது மட்டும் சிலருக்கு உள்ளம் எரிகிறது; கரம் அசைகிறது; கண்கள் சிவக்கிறது; மீசை துடிக்கிறது, தூற்றலும் பழிசுமத்தலும் தொடர்கதையாகிறது! இவர்களின் போக்கே இதுதான், நமது புனித மார்க்கத்தைக் கேவலப்படுத்துகிறார்கள் என்று கண்டிக்கக் கிளம்பிவிடுகின்றனர்!

தூஷிக்கிறோம்—நாத்திகம் பேசுகிறோம் — புனிதமானவைகளைக் கேலிக்குரியதாக்குகிறோம் என்று எவரும் முன்பின் யோசியாமல் பழிசுமத்திக்கொண்டு வருவதைத்தான் நாம் பல வருடங்களாகப் பார்க்கிறோம். 'இடையே உள்ளதுகள்'தான் இப்படிப் பழிசுமத்திக் கொண்டுள்ளன. தூற்றுகிறார்கள்! கேலிபேசுகிறார்கள்! புனித மார்க்கத்தைக் கேவலப்படுத்துகிறார்கள் எனும் இந்தப் பழிகளுக்குப் பதிலளித்து விளக்கம் தரும் எங்களுக்கு, இது தவறு என்று ஆதாரத்துடன் மெய்ப்பிக்க இவர்கள் யாரேனும் முன்வந்தனரா இதுவரையில்! முன்வருவரா இனியாவது? அந்தவழிக்கே வருவதில்லை! ஆனாலும், பொருளற்ற பழிசுமத்தவோ கொஞ்சமும் கூசுவதில்லை.

சோதிடம், சகுனம், சொர்க்கம், நரகம், இம்மை, மறுமை, பாவம், புண்ணியம், விதி என்பதெல்லாம் பொருளற்றவைகள்; மக்களின் அறிவையும் நேரத்தையும் செல்வத்தையும் பாழ்படுத்துபவை; உழைத்து வாழ இயலாத ஊதாரிக் கூட்டமொன்று, உத்தம குணம் கொண்டோருக்கு வீசிய சூழ்ச்சிவலை என்று நாம் அடிக்கடி கூறினோம் — கூறுகிறோம்—கூறிக் கொண்டுமிருப்போம்! இத்தகைய புடம்போட்டெடுக்கப்பட்ட தங்கம் நிகர் கருத்துக்கள் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியினராகிய நமது பழந்தமிழ் இலக்கியத்திலே வானத்துத் தாரகைகளென ஏராளமாக இறைந்துகிடக்கின்றன. பக்கத்துக்குப் பக்கம் — பாடலுக்குப் பாடல் —எழுத்துக்கு எழுத்து நமது எண்ணங்கள் மின்னிச் சிரிக்கின்றன. இதோ, தண்டமிழர் வீரத்தைத் தரணியோர்க்குப் பறையறைந்து சாற்றிடும் புறநானூறு ஓவியத்திலிருந்து ஒரே ஒரு பாடல்!

"ஆய்" என்னும் மன்னன் ஒருவன்! சிறந்த வீரன்! பொதியின் மலைத் தலைவன்! அதனருகேயுள்ள ஆய்குடி என்பது இவனது ஊர்! ஆய் அண்டிரன் என்றும், அண்டிரனென்றும் இவன் பெயர் வழங்கும். இத்தகைய சிறப்பு மிக்க இம்மன்னன் இல்லையென்று வந்தோர்க்கு இல்லையென்றியம்பாது பொன்னும் மணியும், முத்தும் களிறும் ஏராளமாக மாரியென வாரி வாரி வழங்கினான்! இங்ஙனம் இவன் வழங்கியது இக்காலத்தோர் சிலர் எண்ணமிட்டுச் செய்வதைப்போல் இப்பிறப்பின்கட் செய்யும் அறம் மறுபிறப்பில்வந்து உதவுமென்ற மூடநம்பிக்கை கொண்டல்ல! தமது ஆன்றறிந்தடங்கிய சான்றோர்கள் சென்ற நெறியெனப் போற்றி "வறியார்க்கொன்றீவதே ஈகை, மற்றெல்லாம், குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்றகுறள் நெறிப்படி வாழ்வாங்கு வாழ்ந்தான்! அறியாமையினை அவன் மனம் ஒப்பவில்லை! மூடநம்பிக்கையை விரட்டி அடிக்க முற்பட்டுள்ளான்! இதனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரே பேசுகிறார், கேளுங்கள் இதோ:

"இம்மைச் செய்தது மறுமைக் காமென்னும்
அறவிலை வணிக னாயலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்ட தவன்கை வண்மையே!"

(இப்பிறப்பின்கண் செய்ததொன்று மறுபிறப்பிற்கு உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து, அதற்கு அறங்கொள்ளும் வணிகன் ஆய் அலன். சான்றோர் பிறரும் போனவழியென்று உலகத்தார் கருத, அந்த நற்செய்கையிலே பட்டது அவனது கைவண்மை.)

✱

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற மெய்ப்பாட்டினை உணர்ந்த எவரும், இடையிலே ஏற்பட்ட மதச் சழக்கர்களின் மாயவலையில் விழமாட்டார்கள். மீறித் தவறி விழுந்த காரணத்தால் ஏற்பட்ட கொடுமைகளும் கோளாறுகளும், அவற்றின் பயனாக விளைந்த பூசல்களும் ஏராளம்! ஏராளம்!! இன்னும் அவற்றை வளர விடுதல் மனிதப்பண்புக்கே இழுக்கென்பதை விளக்குவதாக அமைகிறது இக்கட்டுரை—ஆசிரியர்.

★

பாடபுத்தக மோசடி

—[✻]—

"சென்னை நகராட்சி மன்றத்தில் ஒரு புதிய குழப்பம் தோன்றியிருக்கிறது. சமீபத்திய தேர்தலுக்கு முந்தியிருந்த நகராட்சிமன்ற உறுப்பினர்கள் நகராட்சி மன்றப் பள்ளிக்கூட நான்காவது வகுப்புப் பிள்ளைகளுக்குச் சில குறிப்பிட்ட புத்தகங்களைப் பாடமாக வைக்கும்படி சிபாரிசுசெய்துவிட்டுச் சென்றனர். இப்பொழுது புதிதாக நகர மன்றத்துக்குள் பிரவேசித்துள்ள தி. மு. க. அங்கத்தினர்கள் பழைய சிபாரிசை ரத்து செய்துவிட்டனர். இதற்குக் காரணம் என்னவென்று விசாரித்ததில் திடுக்கிடும்படியான விவரம் தெரிய வந்திருக்கிறது.

முந்தைய கல்விக் குழு, புத்தகத்தைக் கண்ணால் கூடப் பாராமல், சர்க்கார் பாட புத்தகக் கமிட்டியின் அங்கீகாரம்கூடப் பெறாத புத்தகங்களை அவசர அவசரமாக, அவர்கள் பதவியை விட்டு விலகும் நாளன்று இரவு ஒன்பது மணிக்கு முடிவு செய்துவிட்டுச் சென்றிருக்கின்றனர். புத்தகம் அச்சாகி, அது சர்க்கார் பாடபுத்தகக் கமிட்டி அங்கீகரித்து, அங்கீகரித்த புத்தகங்கள் கெஜட்டில் வெளியான பிறகு அவற்றிலிருந்து சென்னை நகரசபைக் கல்விக் குழுவினர் தேர்ந்தெடுப்பார்கள். இந்த ஒழுங்குமுறையை அப்படியே காற்றில் பறக்க விட்டுவிட்டு, பழைய கல்விக் குழு அதிக்கிரமமாக நடந்துகொண்டிருக்கிறது.

இந்த ஒழுங்கீனத்தைக் கண்டுபிடித்து, துணிச்சலுடன் பழைய முடிவை ரத்து செய்ததற்கு இப்போதைய கல்விக் குழுவையும் நகரசபையையும் பாராட்டவேண்டும். ஆனால் இப்போது உடனடியாகக் கஷ்டப்படுபவர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகள். பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் பிள்ளைகள் பாடபுத்தகங்கள் இல்லாமல் தவிக்கின்றனர். உபாத்தியாயர்கள் என்ன பாடம் நடத்துவது என்று தெரியாமல் நேரத்தைவீணாக்கிக் கொண்டிருக்கின்றனர். துருதுருவென்று ஆர்வத்தோடு துடிக்கும் பிள்ளைகளைப் பள்ளிக்கூட அறைக்குள் அடைத்து ஒருபாடமும் நடத்தாமல் அவர்களைச் சும்மா உட்காரவைத்திருப்பது, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பெருங்கொடுமையாகும். விரைவில் புதுக் கல்விக்குழு புதுப் புத்தகத்தைச் சிபாரிசு செய்துவிடும் என்று நம்புகிறோம்"

— கல்கி.

குறிப்பு:—பாடபுத்தகப் பிரச்சினை இப்பொழுது முடிவடைந்து விட்டது. புதிய புத்தகக் கமிட்டியின் சிபார்சுப்படி புத்தகம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

உபயோகிக்கப்படவேண்டும் என்கிறாரே! இதற்கு கனம் காமராசர் அவர்கள் என்ன பதில் சொல்லுவார்.

22—6—59 அன்று ஒருபொதுக் கூட்டத்தில் "மாணவர்களைக் கண்டு ஆசிரியர்கள் பயப்படும்படியான ஒருநிலையைஇந்தத் தி.மு.க. காரர்கள்உண்டாக்கிவிட்டார்களே! மாணவர்களை அரசியலில் புகுத்தி அவர்களின் படிப்பைக் கெடுத்துவிட்டார்களே" என்னும் பொருள்பட திரு. காமராசு அவர்கள் பேசியுள்ளார்கள். மாணவர்களுக்கு அரசியல் தேவை. ஆனல் அவர்கள் அரசியலில் நேரடி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று பொது மேடைகளில் பேசிவருபவர்கள் தி.மு.க.வினர்என்றால் அது மிகையாகாது. வருங்கால உலகை உருவாக்குபவர்கள் மாணவர்கள்தான். அவர்கள் கையிலேதான் உலகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குக் கல்வியறிவு அவசியம் தேவை. அவர்களின் கல்வியறிவிலே எவ்வளவு அக்கறை காங்கிரசுக்கு இருக்கிறதோ; அந்த அளவுக்குத் தி.மு.க.வுக்கும் உண்டு. இன்னும் அழுத்தமாகக் கூறவேண்டுமானல், காங்கிரசுக்கு இருக்கும் அக்கறையைவிட அதிகம் உண்டு என்றுகூடக் கூறுவோம். பதவிக்காக மாணவர்களைத் தூண்டிவிட்டு மறியல் போராட்டங்களில் ஈடுபடும்படி தி. மு. க. கூறாது. அந்தப் புனிதச் செயலை காங்கிரசார், இன்று கேரளத்திலே செய்துவருகிறார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் கூறட்டும், மாணவர்களை அரசியலில் அதிகமாக யார் ஈடுபடுத்துகிறார்கள் என்பதை. கனம் காமராசர்அமர்ந்திருக்கும் இடம் புனிதமான இடம். அந்த இடத்தின் மதிப்பைப் பாதுகாக்கவேண்டியது அமைச்சரின் கடமை. மறந்து ஏதோதோ பேசுகிறார்.

கடந்த 12 ஆண்டுகளாகடெல்லியின் உதவியால் நம் தென்னடு எவ்வளவு முன்னேறி இருக்கிறது என்பதை நாம் அறிவோம்--நாடும் அறியும். எத்தனையோ வழிகளில் புறக்கணிக்கப்பட்டு உள்ளது என்பதை பன்னிப்பன்னிப் சொல்லியாகிவிட்டது. நமது அமைச்சர்களும் அறிவார்கள். சில சமயங்களில் தென்னடு வடநாட்டார்களால் புறக்கணிக்கப்படுகிறது என்பதை அமைச்சர்களே பேசி இருக்கிறார்கள். இருப்பினும் ஏக இந்தியா பேசுகிறார்கள். காரணம் என்ன? கிராமங்களிலே சொல்லுவார்கள் "எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம்" என்று. இதே வழியைத்தான் டெல்லியும் நமது மந்திரிகளும் கடைப்பிடிக்கிறார்கள். கிடைத்தவரை ஆதாயம் என்று கருதி டெல்லி சுரண்டுகிறது. நமது பதவி நீடிக்கும் வரை நீடிக்கட்டும் என்று நமது மந்திரிகள் நாட்களைக் கடத்திச் செல்கிறார்கள். இதில் ஐயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. விடுதலை வேட்கைகொண்டு கிளர்ந்தெழுந்த எந்த மக்களும் இதுவரை தோல்வியை முத்தமிட்டதாக வரலாற்றிலே நமக்குச்சான்றுகள் கிடைக்கவில்லை. இதை நாமும் அறிவோம், அமைச்சர்களும் அறிவார்கள். நேருவுக்கு மட்டும் இது தெரியாமலா இருக்கும்! அவர்தான் உலக வரலாறு எழுதியவராயிற்றே! தெரிந்தும் ஏக இந்தியா பேசுகிறார். காரணம் என்ன? அகப்பட்டவரை சுரண்டுவோம்— வருவித்துத் தர ஆட்கள் இருக்கிறார்கள்— அவர்கள் இருக்கும் வரை நமக்கு ஏன் பயம் என்பதைத் தவிர வேறு காரணம் என்ன இருக்கமுடியும்?

நமது குரல் ஒலிக்கும் அரசு நமக்கு இப்போது இல்லை. சமீபத்தில் நமது மதிப்பிற்குரிய ஜனதிபதி அவர்கள் இலங்கை செல்லும்போது இலட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்க்கைப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டு வாருங்கள் என்று அவரிடம கேட்டிருக்க மாட்டார்களா? இவர்கள் கேட்கவில்லை என்றே வைத்துக்கொள்வோம், நாட்டின் காவலர் ஜனதிபதிதான் தமக்கு ஓடி ஓடி விருந்து உபச்சாரங்கள் செய்யும் திரு பண்டாரநாயகாவிடம், 'ஏனையா எனக்கு இப்படி ஓடி ஓடி விருந்துகள் நடத்தும் நீர், இந்த இலங்கை இந்தியர்கள் பிரச்சனையை ஒரு வழியாகத் தீர்த்துவிடக் கூடாதா?'' என்று கேட்டிருந்தால் அவர் என்ன மறுப்பா கூறியிருப்பார்! இவர் சென்றது வேறு வேலையாம், ஆகவே அதைப்பற்றிப் பேசவில்லையாம். இலங்கைப் பிரதமரே இந்த இந்தியா வம்சாவளியினர் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு தீர்க்கவேண்டும் என்று இவரிடம் சொன்னராம். நமது ஜனதிபதி அவர்களும் அப்படியே செய்யுங்கள் என்றாராம். நமக்குச் செய்திகள் கிட்டியுள்ளது, இது நம்மவர் அரசாக இருந்திருக்குமானல் இலட்சக் கணக்கான மக்கள் நாடற்ற நிலையிலே உள்ள இடத்திற்குச் சென்ற நீங்கள்--இந்த நாட்டின்பாதுகாவலர்-- அந்த அரசிடம் அதைப்பற்றி மூச்சுவிடாமல் வந்துள்ளீரே என்று கேட்டிருக்க மாட்டாரா? இதுவரை கேட்டதாகத் தெரியவில்லையே. அவ்வளவு நெஞ்சுரம் இவர்களுக்கு இருந்திருக்குமானல் நாம் எப்பொழுதே முன்னேறி, இருந்திருப்போமே. அவருந்தான் (ஜனதிபதி) அவர் இனத்தவராய் அதாவது வட இந்தியர்கள் சிலோன் வாசிகளாய் இருந்திருந்தால் இப்படி வாய்மூடி மௌனியாக விருந்துண்டு வறிதே வந்திருப்பாரா? நேர்மையுள்ளம் கொண்டோர் யாராயினும் இதே கேள்வியைத்தான் கேட்பார்கள் பாகிஸ்தான் அகதிகளுக்காகக் கோடி கோடியாய்க் கொட்டும் இந்த அரசைக் கண்டும் கேட்டும் நம்மவர்கள் ஏக இந்தியா பேசுகிறார்களே! அங்குதானே நமக்கு வேதனை தாங்கமுடியவில்லை.

உலக நாடுகள் எல்லாம் தன் இனம், தன் நாடு, தன் மொழி என்ற உரிமைக்குரலை உரக்கக் கூறும் இந்த நாளில் நீங்கள் மட்டும் ஏன் உங்களோடு மொழியில், கலையில், பண்பில் நாகரிகத்தில், கலாச்சாரத்தில் எதிலுமே ஒத்துவராத வட இந்தியர்களோடு சேர்ந்து இருப்பதிலே என்ன இலாபம் அடையப்போகிறீர்கள்? மிஞ்சிப் போனல் பதவி என்ற எலும்புத்துண்டு, அதுவும் எதுவரை? உங்களால் அவர்கள் பயன் அடையுமட்டும். பயன் இல்லாதபோது உங்கள்குரல் அங்கே ஒலிக்காது. இதை மட்டும் நீங்கள் நெஞ்சிலே நிறுத்திவையுங்கள். ஆகவேதான் கூறுகிறோம் ஏக இந்தியா பேசாதீர்கள், சொந்த நலனுக்காக ஒரு நாட்டையே காட்டிக்கொடுத்து வாழ்ந்தார்கள் என்று வருங்கால சந்ததியார்களும் சரித்திர ஆசிரியர்களும் தூற்றுவார்கள், எள்ளி நகைப்பார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

★

கவுன்சிலர் காத்தமுத்து

—பழநி—

சில்க் ஜிப்பா—ஜரிகை அங்கவஸ்திரம்— கட்டைச் செருப்பு—கையிலே ஒரு தோல்பை—இத்தனையும் கொண்ட உருவம் யார் என்று கேட்டால் தெரிந்தவர்கள் உடனே சொல்லிவிடுவார்கள். அவர்தான் "கவுன்சிலர் காத்தமுத்து" என்று!

அந்த அளவிற்கு அவருடைய பெயர் பிரபலமாகிவிட்டது, அந்த நகராட்சி மன்றத்தில்—அதாவது, அவர் அந்த மன்றத்திற்கு உள்ளே நுழைந்து ஓரிரு வாரங்களிலேயே!

'பிரபலம்' என்பதற்கு எவ்வளவோ பொருள் சொல்பவர்கள் அங்கே உண்டு! ஆனால், அந்தப் பொருள் விளக்கங்களைப்பற்றியெல்லாம் நாம் கவலைப்படுவானேன்? அவர் ஒரு 'பிரபலர்'—அதாவது, 'பிரமுகர்!' அவ்வளவு தானே நமக்கு வேண்டியது!

அன்று காலை 10 மணிக்கு கவுன்சில் கூட்டம். வழக்கத்துக்கு மாருக 9 மணிக்கெல்லாம் கவுன்சிலர் புறப்படத் தயாராகிவிட்டார்.

'தயாராகிவிட்டார்' என்று ஒரு வார்த்தையில் அவ்வளவு சுலபமாகச் சொன்னல், பாவம் அவர் வருத்தப்படக் கூடும்.

சீவி— சிங்காரித்து— ஒரு தடவைக்கு நாலு தடவை கண்ணாடியைப் பார்த்து முகத்தைச் சரி செய்துகொண்டு— ஐந்து 'கோட்டிங்' பவுடர் போட்டு— அதற்கு மேல் ஒரு சந்தனப பொட்டிட்டு—'மேக் அப்' வேலையை முடித்துக் கொள்ளும் பொருட்டு 'செண்ட்' பாட்டிலை மிகக் கஷ்டப்பட்டு அவசர அவசரமாகத் திறக்க, கார்க் கழன்றதும் 'செண்ட்' கொஞ்சம் மேஜையிலே வைக்கப்பட்டிருந்த காபியிலே சிந்த— 'தலைவிதியே' என்று அவர் அந்தக் காபியை அருந்தி வயிற்றுக்கும் கொஞ்சம் 'செண்ட்' தடவிக்கொண்டுதான் புறப்பட்டார்!!

கவுன்சிலர் காத்தமுத்து என்றால் எந்நேரமும் நண்பர்கள் நான்கு ஐந்து பேராவது சூழ்ந்து இருப்பார்கள் என்று பொருள். காரணம், அவர் பலருக்கு நண்பர்-அதோடு ஒண்டிக் கட்டை!

அவருக்குத் திருமணம் ஆகிவிட்டதென்றும், மனைவி காலமாகிவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது.

காரணம் எப்படியிருந்தாலும், எந்நேரமும் அவரைச் சூழ்ந்து இருக்கின்ற நண்பர்கள் ஏனே அன்று இல்லை— அதிலே, அவருக்கும் மகிழ்ச்சிதான்!

"முகில்"

எட்டி எட்டிப் பார்த்தார்—'டாக்சி' வருவதாகத் தெரியவில்லை! கவுன்சிலராயிற்றே! டாக்சியில்தானே போகவேணடும்!

கவுன்சிலர் ஆன தேதியிலிருந்து அவர் நடப்பதையும் விட்டுவிட்டார்— டவுன் பஸ் பயணமும் வைத்துக் கொள்வதில்லை; டாக்ஸிதான்! சமயத்துக்கு அது கிடைக்கவில்லையென்ருல் எவ்வளவு எரிச்சல் ஏற்படும்? அந்த எரிச்சலோடு வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

உள்ளேயிருந்து ஒரு குரல் "ஏங்க!"! அழைத்தது வேலைக்காரிதான்—ஆனல் வீட்டுக்காரியின் உரிமை அந்தத் தொனியில் கலந்திருந்தது!

"என்ன?" என்று, சற்று ஆத்திரத்தோடு கேட்டுக்கொண்டே உள்ளே சென்ருர்.

"அந்த போர்டு எழுதக் கொடுத்திங்களே...!

"ஆமா! அதுக்கென்ன இப்போ?"

"இல்லிங்க! சாயந்தரம் கொண்டு வந்த தர்ரதா அந்த ஐயா சொல்லிட்டுப் போனருங்க!

"சரி! சரி!" என்று சொல்லிக் கொண்டே வெளியேறிவிட்டார்.

டாக்சியும் வந்தது— அவரும் பறந்தார்— கவுன்சில் கூட்டம் ஆரம்பிப்பதற்கும் அவர் போய் இறங்குவதற்கும் சரியாக இருந்தது!

ஆனல் அவர் நேரே ஆபீசுக்குப் போனர்— கவுன்சிலுக்கு அல்ல!

"ஆமாம்! அந்த 'அப்பாயின்ட்மெண்ட்' என்ன ஆயிற்று?" அங்கிருந்த உத்தியோகஸ்தர் ஒருவரிடம் கேட்கப்பட்ட கேள்வி இது! கேள்வியில் அதிகாரம் மட்டுமல்ல, அகங்காரமும் தொனித்தது!

உத்தியோகஸ்தர், ஒரு நிமிஷம் இடைவெளிவிட்டு "மன்னிச்சிக்கங்க..." என்று இழுத்தார்!

"என்னய்யா மன்னிக்கிறது! இன்னுமா 'அப்பாயின்ட்மென்ட்' போடலே? உன்னைப் பார்க்கிறேன் ஒரு கை!" என்று கத்தினர்.

இதை யாரும் சவால் என்று எடுத்துக்கொள்ளத்தேவையில்லை. காரணம், கோபம் வந்தால் அவர் யாரிடமும் அப்படித்தான் பேசுவார்! வேலைக்காரியைக் கூட "உன்

னைப் பார்க்கிறேன் ஒரு கை!" என்றுதான் விரட்டுவார். அந்த 'அம்மா'வுக்குத் தெரியும், அந்த 'விரட்ட'லுக்குப் பொருள் என்னவென்று!

ஆனால் அந்த உத்தியோகஸ்தருக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? அவர் உடலில் அன்று எடுத்த நடுக்கம் — அப்பப்ப! சொல்லி முடியாது!

மீண்டும் குரலைச் சரிசெய்து கொண்டு "இல்லிங்க!......'அப்பாயின்மென்ட்'.....போட்டாச்சுங்க.... ஆனால், நேத்து ஆர்டர் அனுப்ப மறந்துட்டேனுங்க...இப்பவே..."

"ஆர்டர் இன்னும் அனுப்பலியோ! சபாஷ்!...அதைஏனய்யா முன்னேயே சொல்லக் கூடாது? உன்னைப் பார்க்கிறேன் ஒரு கை" என்றார்!...

அந்த உத்தியோகஸ்தர், எதுவும் புரியாமல் 'அப்பாயின்மென்ட்' ஆர்டரை நடுங்கிக் கொண்டே அவர் கையில் கொடுத்தார்!

அதைக் கையில் வாங்கியதுதான் தாமதம் — கவுன்சிலரின் முகத்தில் பூசப்பட்டிருந்த பவுடர் சற்றுப் பிரகாசத்தோடு மின்ன ஆரம்பித்துவிட்டது — அதாவது முகத்தில் 'தெளிவு' ஒளிர்ந்தது!

ஆனால் வியர்த்துக் கொட்டியது —மகிழ்ச்சிப் பெருக்கின் விளைவு.

'அப்பாயின்ட்மென்ட்' ஆர்டரிலிருந்த பெயரை, சற்று வினயத்தோடு, ஆனால் உட்பொருளோடு மெள்ளப் படித்தார் 'கமலா' என்று!

'கமலா'—'காத்தமுத்து' இரண்டு பெயர்களையும் மாறி மாறியும், இரண்டையும் சேர்த்தும் பல தடவைகள் உச்சரித்துக்கொண்டிருந்ததாகப் பணியாட்கள் சொல்லுகிறார்கள்!

எப்படியோ கவுன்சில் கூட்டம் முடிந்தது 1-மணிக்கு.

ஆனால் அவர் கவுன்சில் அலுவலகத்தைவிட்டு அசைவதாக இல்லை!

வேலைக்காரர்கள் எல்லாம் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்—காரணம் புரியாமல்!

இதையெல்லாம் கவனித்திடவா அவருக்கு நேரம்—காபியும் டீயும் மாறிமாறி உள்ளே போய்க்கொண்டிருந்தது—சிகரெட்டுகள் புகைந்த வண்ணம் இருந்தன!

மெள்ள மெள்ள, காலம் கடத்தப்பட்டது--3-மணி ஆகிவிட்டது!

ஆனால், கவுன்சிலர் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்தக் காரிகை வரவில்லை.

ஏமாற்றத்தோடு வீடு திரும்பினார்—டாக்சியில்தான்!

உள்ளே நுழைந்ததும் மேஜையின்மீது ஒரு திருமண அழைப்பிதழ் காத்துக்கிடந்தது! கண்ணாயிரம்—கமலா திருமணம்!

ஆம், அதே கமலாதான்! கவுன்சிலர் இடிந்துபோய் உட்கார்ந்தார் —எதுவும் புரியாமல்!

வேலைக்காரி வந்தாள்—புதிதாக எழுதப்பட்டிருந்த 'போர்டை'க் கவுன்சிலரிடம் நீட்டியபடி.

அதில் "கவுன்சிலர் காத்தமுத்து" என்ற அவருடையபெயர் உடைக்கப்பட்டிருந்தது!

அதைப் பார்த்தார்—மறுவினாடி அது பறந்தது — எதிரிலிருந்த நேரு படம் சுக்கு நூறாகக் கீழே விழுந்தது!

ஆனால், மனதுக்குள் சொல்லிக் கொண்டார், 'என்பெயர் சரியாகத் தான் எழுதப்பட்டிருக்கிறது என்று!

குடியாத்தம்

தி. மு. க. நகரமன்ற உறுப்பினர்கள்



ஏ. கே. துரைசாமி



டி. எஸ். சுப்பிரமணியம்



எம். எஸ். தட்சிணாமூர்த்தி

காஞ்சீபுரம், ... திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.